ISSN 1391-9504

# விஜய்

Vijey විජය

09.03.2011 - மலர் 08, இதழ் 01



## டிஸ்கவரியின் இறுதிப் பயணம்

## சனத்தொகை கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படும் முறை

## அந்தூரியம் பூ செய்கை முறை

விலை ரூபா 15/-

தமிழ்பேசும் பிள்ளைகளுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கறுவா உரிப்போர் கிளர்ச்சி

ஆள்பதியின் அச்சத்தை சிங்களவர்கள் தமக்கு வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொண்டனர். பிரதிநிதி ஒருவர் ஆள்பதி லோட்டனை சந்திக்க வந்தார். யானை வர்த்தகத்தில் ஒரு பகுதியைத் தரும்படி அவர் கேட்டார். கி.பி.1753 ஆம் ஆண்டிலேயே இந்த நிகழ்வு நடந்தது. அதனை நிராகரிக்கும் பொறுப்பை ஆள்பதி ஏற்றுக்கொள்ளவில்லை. அதனை தமது பிரபுக்களிடம் கேட்க வேண்டும் என கூறினார். இது குறித்து பத்தேவியாவில் உள்ள அதிகாரிகளுக்கு செய்தி அனுப்பினார். அவர்கள் தமது விருப்பமின்மையைத் தெரிவித்து பதில் அனுப்பினர். இதனை ஆள்பதி மன்னனுக்குத் தெரிவித்தார். இதற்கிடையில் நாட்டின் எல்லைப்புறம் நெடுகிலும் ஒல்லாந்த வர்த்தக சங்கத்திற்கு சொந்தமான இடங்களில் எதிர்ப்பு நடவடிக்கைகள் ஆரம்பமாகின.

ஆரம்பத்தில் முன்வைத்த கோரிக்கைகளை சிங்களவர்கள் மீண்டும் முன் வைத்தனர். மன்னனின் அனுமதியின் பேரில் அவருக்கு உரித்தான இடங்களின் ஏகபோக உரிமையை அவர்கள் எடுத்துக் கொண்டனர். ஒல்லாந்த வர்த்தக சங்கத்திற்கும் கறுவாவைச் சேகரித்த வர்த்தக சங்க சேவையாளர்களுக்கும் பெரும் இடையூறுகளை விளைவித்தனர். அவர்களை விரட்டி அடித்ததுடன் அவர்களின் கறுவாவையும் அழித்து நிர்மூலமாக்கினர்.

பிரதிநிதிகள் குழு மீண்டும் முன்னர் கேட்ட கோரிக்கைகளை முன் வைத்தனர். இம்முறையும் அது நிராகரிக்கப்பட்டது. அப்பொழுது கறுவா உரிப்போரிடையே அதிருப்தி நிலை தோன்றியது. இதனை மன்னனின் பிரதிநிதிகள் தூண்டிவிட்டனர்.

இதனால், கறுவா உரிப்போரின் அதிருப்தி அதிகரித்து அது ஓர் கிளர்ச்சியாக எழுச்சி பெற்றது. கொழும்பு மற்றும் மாத்தறை திசாவைகளில் அது மிக மோசமான பின் விளைவுகளை ஏற்படுத்தியது. கிளர்ச்சிக்கு இரு பிரதான காரணங்கள் தென்பட்டன. ஒன்று வரிச்சுமை. வரியை அறவிட்டவர்கள் மக்களை அவசரப்படுத்தியதோடு, மக்களை நிர்ப்பந்தமும் செய்தனர். இதனால், மக்கள் பொறுமை இழந்து கிளர்ச்சியில் ஈடுபட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உ/தரம் புதிய பாடத்திட்டம்:

# தனிப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கான விண்ணப்பப்படிவ விநியோகம்



இந்த வருடத்திலிருந்து அமுலுக்கு வருகின்ற க.பொ.த. உயர் தரம் புதிய பாடத்திட்டத்தின்கீழ் பரீட்சைக்குத் தோற்றவுள்ள தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கான விண்ணப்பப் படிவங்கள் இவ்வாரத்திலிருந்து விநியோகிக்கப்படவுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

புதிய பாடத்திட்டம் இவ்வருடத்திலிருந்து நடைமுறைக்கு வருகின்றபோதும், தனிப்பட்ட விண்ணப்பதாரிகள் குறைந்த எண்ணிக்கையிலேனும் இம்முறை பரீட்சைக்கு விண்ணப்பிப்பார்கள் என பரீட்சைகள் ஆணையாளர் அநுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, தனிப்பட்ட விண்ணப்பதாரிகள் இவ்வாரத்திலிருந்து பரீட்சைகள் திணைக்களத்திற்கு வருகை தந்தோ அல்லது தபாலூடாகவோ பரீட்சைக்கான விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# பெரிய மீன்தொட்டி



வண்ணமீன் விற்பனை அங்காடிகளில் சிறிய தொட்டிகள் முதல் பெரிய தொட்டிகள் வரை பார்த்திருப்போம். ஆனால், உலகிலேயே மிகப் பெரிய மீன் தொட்டியைப் பார்த்திருக்கிறீர்களா? அது ஜேர்மனியின் தலைநகர் பேர்லினில் உள்ள 'ரெடிஸ்ஸன் ப்ளூ' ஹோட்டலில் உள்ளது.

உருளை வடிவிலான இந்த மீன்தொட்டி 11.2 மீற்றர் அகலமும், 24.9 மீற்றர் உயரமும் கொண்டது. இந்த மீன் தொட்டியை வைப்பதற்காக 9.2 மீற்றர் உயரத்தில் கொன்கிரீட் தளம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த தொட்டி நிரம்பும்வரை கடல் நீர் நிரப்பப்பட்டு, 56 வகைகளைச் சேர்ந்த 2,600 மீன்கள் விடப்பட்டுள்ளன. அந்த மீன்களுக்கு உணவு வழங்குவதற்காகவும் மீன்தொட்டியை தினமும் சுத்தம் செய்யவுமென இரண்டு பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பொதுவாக, வண்ண மீன்களைக் கண்டுகளிக்க அனைவரும் விரும்புகின்றனர். மீன்தொட்டியிலுள்ள மீன்களை சிறிது நேரம் பார்த்துக்கொண்டிருந்தால், மன அழுத்தம் குறையும் என்று கூறப்படுகின்றது. அந்தவகையில், இன்று வீடுகளில் மட்டுமன்றி; அலுவலகங்கள் மற்றும் வியாபார நிறுவனங்கள் என அனைத்து இடங்களிலும் வண்ண மீன்களைக் கொண்ட அழகு மிகு மீன்தொட்டிகளைக் காண முடிகின்றது.

# வடக்கில் கல்வி அபிவிருத்திக்கு 310 மில்லியன் ரூபா ஒதுக்கீடு



இவ்வாண்டில் வட மாகாணத்தில் கல்வி அபிவிருத்திக்காக, 310 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. திருகோணமலையிலுள்ள வட மாகாண சபையின் ஆளுநர் செயலகத்தில் அண்மையில் இடம்பெற்ற வட மாகாண கல்வி அபிவிருத்தி தொடர்பான மீளாய்வுக் கூட்டத்திலேயே இதுகுறித்து அறிவிக்கப்பட்டுள்ளது.

# 11 லட்சம் மாணவர்களுக்கு போஷாக்குணவு வழங்கத் திட்டம்

7,600 பாடசாலைகளில் கல்வி கற்று வருகின்ற சுமார் 11 லட்சம் மாணவர்களுக்கு போஷாக்குள்ள உணவை வழங்கவென அரசாங்கம் இவ்வாண்டில் 2,800 மில்லியன் ரூபா நிதியை ஒதுக்கீடு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

100 இற்கும் குறைவான மாணவர் தொகையைக் கொண்ட பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களுக்கும் ஏனைய பாடசாலைகளில் தரம் 1 தொடக்கம் தரம் 5 வரையான வகுப்புகளில் கல்வி கற்று வருகின்ற மாணவர்களுக்கும் போஷாக்குணவை வழங்கும் பொருட்டே, இந்த தேசிய வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

கடந்த வருடம் இந்த தேசிய வேலைத்திட்டத்திற்காக, 2,300 மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டதோடு, இந்த ஆண்டில் அத்தொகை 500 மில்லியன் ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



Vijey විජය
விஜய்
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: Vijey @ Wijeya.lk

# பாதசாரிகள் கடவையைப் பயன்படுத்தாவிட்டால் வழக்குத் தாக்கல்



பாதையைக் கடந்து செல்வதற்காக பாதசாரிகள் கடவையைப் பயன்படுத்தத் தவறும் பாதசாரிகளைக் கைதுசெய்து நீதிமன்றத்தில் ஆஜர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நடவடிக்கை மேல் மாகாணத்தில் ஆரம்பிக்கப்பட்டு, பின்னர் நாடளாவிய ரீதியில் அமுல்படுத்தப்படவுள்ளதாக வாகனப் போக்குவரத்து பாதுகாப்பு மற்றும் மேல் மாகாண போக்குவரத்துப் பிரிவு பிரதி பொலிஸ்மா அதிபர் அஷோக விஜேதிலக தெரிவித்துள்ளார்.

கடவையூடாகப் பாதையைக் கடந்து செல்லாமல், தங்களின் எண்ணப்படி பாதையைக் கடந்து செல்வதை பாதசாரிகள் வழக்கமாக்கிக் கொண்டிருப்பதனால், வாகன விபத்துக்கள் அதிகரித்துச் செல்கின்றன. அதனால், இந்த சட்டத்தை கடினமாக அமுல்படுத்துவதற்குத் தீர்மானித்திருப்பதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நகர் புறங்களை அண்மித்த பகுதிகளில் பாதசாரிகள் கடவையில் வாகனங்களை நிறுத்துகின்ற வாகன சாரதிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

30 நாட்களைக் கொண்ட விசேட தபால் மூல ஆங்கிலப் பாடநெறி
ஆங்கிலம் பேசக் கற்போம் ! வெற்றி பெறுவோம்
நீங்கள் இருக்கும் இடத்தில் இருந்து கொண்டே எம்முடன் இணைந்து எளிய நடையில் தமிழ் மூல விளக்கத்துடன் ஆங்கிலம் படிக்கலாம்.
பாடநெறியில் இணையும் எல்லோருக்கும் இவைகள் வழங்கப்படும்
பெயர் /முகவரி என்பவற்றை தெளிவாக குறிப்பிட்டு 0773-123 523 க்கு SMS செய்யுங்கள்.
10 பாடத்தொகுதிகள் / Spoken English Video CD ஒன்று
Dialog Sim Card ஒன்று Video cd வழிகாட்டி புத்தகம் / அடையாள அட்டை
Diploma in English சான்றிதழ் ஒன்று என்பன எல்லோம் வழங்கப்படும்.
எமது Diploma சான்றிதழ் உள்நாட்டு வெளிநாட்டு வேலை வாய்ப்பை பெற நேர்முகப்பரீட்சைகளுக்கும் இச்சான்றிதழ் தகுதி பெற்றது
மேலதிக விபரங்களுக்கு பெயர், முகவரியுடன் 20/- பெறுமதியான 2 முத்திரை அனுப்பி பெறலாம்.
UNION EDUCATIONAL INSTITUTE
P.O. BOX 143, KANDY, SRI LANKA. CALL: 0817 918 981 / 0773 123 523

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சி மன்றங்களின் செயற்பாடுகள்







ஒரு நாடு ஜனநாயகத்தின் வழியில் ஆட்சி செய்கின்றபோது, அங்கு மக்கள் தான் எஜமானர்கள். அந்தவகையில் தேர்தல்களும், அதனூடாக செயற்படுகின்ற அரசயாக்கங்களும், சபைகளும் மக்களின் வாழ்க்கைப் பொறிமுறைக்கு உத்வேகத்தைக் கொடுத்து, சமூக நீதியையும், சட்டத்தையும் நல்லாட்சியையும் வழங்குகின்றபோதுதான், உண்மையான ஜனநாயகம் தழைத்தோங்குகின்றது. அமெரிக்காவின் ஜனாதிபதியாக இருந்த ஆபிரகாம்லிங்கன் 1863 இல் கெட்பர்க் என்னும் இடத்தில் வைத்துக் கூறிய கருத்து உலகப் புகழ்பெற்றது. ''மக்களால் மக்களுக்காக நடத்தப்படுகின்ற மக்களாட்சியே ஜனநாயக ஆட்சியாகும்'' என்றார். அந்தவகையில் இலங்கையும் ஒரு ஜனநாயக நாடு என்ற ரீதியில் இங்கு உள்ளூராட்சித் தேர்தல் நடைபெற ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

நாட்டின் அரசதுறையை இயக்குவதில் பல்வேறு அமைப்புக்கள் உதவுகின்றன. நீதித்துறை, நாடாளுமன்றம், ஜனாதிபதி, அமைச்சுக்கள், மாவட்ட செயலகங்கள், பிதேச செயலகங்கள், மாகாணங்கள், உள்ளூராட்சி நிறுவனங்கள் போன்ற பல அமைப்புக்கள் அரசின் செயற்பாட்டை மக்கள் முன்கொண்டு செல்ல உதவுகின்றன. அதிகாரத்தைப் பரவலாக்கி அப்பிரதேச மக்களின் அபிவிருத்தித் தேவைகளை இனங்கண்டு அதனை நிறைவு செய்வதற்கு மக்கள் தலைவர்கள் தேவைப்படுவதன் காரணமாக, உள்ளூராட்சித் தேர்தல்கள் காலத்திற்குக் காலம் நடத்தப்படுகின்றன. இது ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் பல்வேறு பெயர்களில் அழைக்கப்பட்டாலும் விடயம் ஒன்றாகவே காணப்படுகின்றது.


ஆபிரகாம்லிங்கன்

மக்களின் வாக்குப்பலத்தினால் அமைக்கப்படும் உள்ளூராட்சி மன்றங்கள் ஊடாக அதிகாரம் வழங்கப்பட்டு மத்திய அரசின் அனுசரணையுடன் சமுதாயத்தின் நலன்கள், சமூக அபிவிருத்திகள் மற்றும் சமூகசேவைகளை நிறைவு செய்தல் என்பன இந்த ஊள்ளூராட்சி மன்றங்களின் பிரதானமான பணிகளாகக் கருதப்படுகின்றன. இந்த உள்ளூராட்சி மன்றங்களின் தோற்றமானது 1865 இல் மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் கொழும்பு மற்றும் கண்டி, காலி போன்ற நகரங்களுக்கான மாநகர சபைகள் உருவாக்கப்பட்டு ஆரம்பமானது. இதன் பின்னர் பல மாநகரங்கள் உருவாகின. 1934 இல் கிராமசபைகள் உருவாக்கம் பெற்றன. தொடர்ந்து 1936 இல் நகர சபைகளும், 1956 இல் பட்டினசபைகளும், 1980 இல் இவற்றுக்குப் பதிலாக மாவட்ட அபிவிருத்தி சபைகளும் உருவாக்கப்பட்டு மீண்டும் 1987 இல் பிரதேசசபைகள் கொண்டுவரப்பட்டன.



இவ்வாறு மத்திய அரசின் பணிகளையும், செயற்பாடுகளையும் திறம்பட நடாத்துவதற்கு உள்ளூராட்சி மன்றங்கள் அவசியமாவை. தற்போது இலங்கையில் காணப்படும் உள்ளூராட்சி சபைகளை மூன்று விதமாக நோக்கலாம்.

1. மாநகரசபைகள்,
2. நகரசபைகள்
3. பிரதேசசபைகள் என்பனவே அவை.

இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் மூலம் 1987 இல் அறிமுகப்படுத்தப்பட்ட மாகாண சபைமுறை உருவாக்கத்துடன் உள்ளூராட்சி மன்றங்களின் நிருவாக அதிகாரமானது, மாகாணசபைகளுக்கு கைமாறியது. 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கத்தைக் கொண்ட பிரதேச சபை சட்டத்தின்கீழ் பிரதேச சபையும் மாகாணசபை ஆட்சியின் பின் உருவாக்கம் பெற்றது. பொதுவாக, உள்ளூராட்சிக்குட்பட்ட சகல அமைப்புக்களினதும் அதிகாரங்களை மூன்று பகுதிக்குள் அடக்கலாம்.

1. பொதுவான சிறுபாதைகள்
2. மக்கள் சுகாதாரம்
3. மக்களின் அன்றாட சேவைகள்.

## பிரதேச சபையின் அதிகாரங்களும் அதன் செயற்பாடுகளும்

✱ பல்வேறு துறை சார்ந்த செயற்றிட்டங்களை செயற்படுத்தத் தேவையான ஆலோசனைக் குழுக்களை அமைத்தல். உதாரணமாக- விவசாய அபிவிருத்தி, சூழல்பாதுகாப்பு, சுகாதார நடவடிக்கைகள் போன்றன.

✱ சிறுபாதைகள், குடிதண்ணீர் மற்றும் குளிப்பதற்கான நிலையங்கள், வியாபார மத்திய நிலையங்களை அமைத்தல் செயற்படுத்தல், அபிவிருத்தி செய்தல் மற்றும் பிரதேசத்திற்கான வேலைவாய்ப்புக்களை பெற்றுக் கொடுப்பதுடன், சமூக சேவைகள் மற்றும் ஏனைய நலன்புரி சேவைகளையும் ஏற்படுத்தல்.

## நகரசபையும், அதன் அதிகாரங்களும் செயற்பாடுகளும்

✱ கட்டடங்களை நிர்வாகித்தல், புதிய பாதைகளை அமைத்தல், நீர்வழங்கல், நீர்வடிகாலமைப்பு, குப்பைகளை அகற்றல், பாதைகளை சீரமைத்தல், மக்களுக்கான சுகாதார சேவைகளை வழங்குதல், அதனை நடத்துதல், வைத்தியசாலைகள், விளையாட்டு மைதானங்கள், வாசிகசாலைகள், பூந்தோட்டங்கள் போன்றவைகளை உருவாக்குதல், பராமரித்தல் மற்றும் பிரதேசத்திலுள்ள அநாதைகளுக்கு உதவுதல், திடீர் அனர்த்தங்களின்போது மக்களுக்கு உதவுதல் போன்ற பல்வேறு செயற்பாடுகளில் ஈடுபடுதல் வரிகளை அறவிடுதல் என்பன இதன் செயற்பாடுகளாகும்.



## மாநகரசபையும் அதன் அதிகாரங்களும்

✱ இலங்கையில் பாரிய நகரங்களைக் கொண்டமைந்த 'அதிகார மையங்களே மாநகர மையங்கள் எனலாம். அண்மையில்கூட, சில நகரங்கள் மாநகரங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டன. இங்குள்ள தலைவரை 'மேயர்' என அழைப்பர். மாநகர சபையின் பணியானது மிகவும் பரந்துபட்டதாக காணப்படும். பாதைகளை அமைத்தல், சுத்தமாக்குதல், புனரமைத்தல், பாலங்களை அமைத்தல், பரிபாலித்தல், தொழிலாளர் நலன்கள், வீடற்றோருக்கு வீடுகள் அமைத்தல், நகரின் அசுத்தங்களை அப்புறப்படுத்தல், சந்தைகளை நடத்துதல், மக்கள் சொத்துக்களைப் பாதுகாத்தல் போன்ற பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான அதிகாரங்களை இந்த மையங்கள் கொண்டுள்ளன.

அத்துடன், எமது நாடு ஒற்றையாட்சியுள்ள இறைமை கொண்ட ஒரு ஜனநாயக நாடாகும். மத்திய அரசின் ஊடாக, அரசு அமுல்படுத்த விளையும் மக்களுக்கான பல்வேறுபட்ட அபிவிருத்தி செயற்பாடுகளை பரவலாக்கி அனைவரும் பயன்படும் வகையில் பொதுவான நிர்வாகத்தினை அரசியல் அதிகாரத்தோடு செயற்படுத்துவதற்கு இவ்வாறான உள்ளூராட்சி அதிகார சபைகளின் செயற்பாடுகள் மிக அவசியமானதாகவே காணப்படுகின்றன.

**எஸ்.எல்.மன்சூர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன ஒருமைப்பாட்டைப் பேணல்


**பாடசாலையில் ஆசிரியர் பாடம் நடத்தும்போது, மனதை ஒருநிலைப்படுத்திப் பாடத்தை நினைவில் களஞ்சியப்படுத்திக் கொள்ளும் மாணவரே, முதல்தர ஆளுமையுடைய மாணவராவார்.**

## கல்வி
## முகாமைத்துவம் - 45
### கற்றலுக்கான ஆலோசனைகள்

### மன ஒருமைப்பாடு என்பது...

இங்கு ஐம்புலன்கள் ஒன்றுபட்டுச் செயல்படுவதையே 'மன ஒருமைப்பாடு' என்கிறோம். கண், காது, மூக்கு, வாய், மெய் போன்ற ஐம்பொறிகளுடன் தொடர்புடைய ஐம்புலன்களும் ஒருமைப்பாட்டுடன் செயற்பட்டால் சிறந்த பலனைப் பெறலாம்.



மாணவர்கள் மனதை ஒருநிலைப் படுத்திச் செயல்களை செய்யும் போதுதான் குறித்த செயல்களை நேராகவும் சீராகவும் உரிய நாளில் ஒழுங்காகவும் செய்து முடிக்கலாம். மனதை ஒருநிலைப்படுத்துவதனூடாக, சிறந்த சிந்தனை பெறப்படும். அது நற்காரியங்களைச் சாதிக்கவும் உதவும். தனி மனித வளத்திற்கு மன ஒருமைப்பாடு என்பது மிகவும் அவசியமாகின்றது.

மாணவர்கள் பரீட்சை நேரங்களில் மனதை ஒருநிலைப் படுத்திக் கவனமாகப் படிக்க வேண்டியுள்ளது. அத்துடன், மன ஒருமையே மறவாத நினைவுகளுக்கு அடிப்படைக் காரணமாகவும் அமைகின்றது. மனதை ஒருநிலைப்படுத்துவதில் முழு வெற்றி பெற்ற மாணவர்கள் மட்டுமே பரீட்சையில் அதிக புள்ளிகளைப் பெறுகின்றனர்.


மன ஒருமைப்பாட்டு ஆற்றலின் அளவைப் பொறுத்துத்தான் உள்ளிருந்து வெளிவரும் அறிவின் அளவும் இருக்கும். மன ஒருமைப்பாட்டின் ஆற்றல் அதிகமாக இருந்தால் உள்ளிருந்து வெளிப்படும் அறிவின் அளவும் அதிகமாக இருக்கும். அது பேராற்றலுக்கு வழிவகுக்கும். அந்தவகையில், பேராற்றல் இருந்துவிட்டால் பெரும் வெற்றியை நம்மால் குவிக்க முடியும். பேராற்றலைக் கொண்டு சிறந்த முறையில் நினைவாற்றலை வளர்த்துக்கொள்ள மாணவர்களால் முடியும்.

கல்வி கற்கும் ஒவ்வொரு மாணவரும் மனதை தன்னுடைய ஆளுகைக்குள் வைத்துக்கொள்ள முயல வேண்டும். மனதை ஒருநிலைப்படுத்தல் என்பது தனி மனித வாழ்வு மேம்பாடு அடைய அவசியமானதாகும். மன ஒருமைப்பாட்டோடு நாம் பார்க்கும் காட்சி நம் மனதில் படமாகப் பதிவு செய்யப்படுகிறது. இந்த நினைவாற்றலை வைத்தே இந்த உலகம் நம்மை எடை போடுவதால், மனித வளர்ச்சிக்கு மன ஒருமைப்பாடு அவசியமாகின்றது.



மன ஒருமைப்பாடு இருந்தால் வளமான வாழ்விற்குரிய வழிகளைக் கண்டுபிடிக்க முடியும். அத்துடன், நம்முடைய உள்ளத்தில் மறைந்து கிடக்கும் ஆற்றலை வெளிக்கொணர்வதுதே கல்வியின் அடிப்படை நோக்கமாக இருக்கின்றது. அந்தவகையில், மனதைப் பக்குவப்படுத்தும் ஆற்றல் மற்றும் நல்லது-கெட்டதை அறியும் ஆற்றல் என்பன கல்வியின் மூலமே ஏற்படுகின்றன. எனவே, கல்வி கற்பதற்கு முன்னர் கல்வி கற்கக் கருவியாக இருக்கும் மனதைப் பண்படுத்த வேண்டும். மனதை ஒருமுகப் படுத்துவதன் மூலமே மனதைப் பண்படுத்தலாம்; அதனால், வாழ்வில் வெற்றியும் பெறலாம். (தொடரும்)





**எம்.ஏ.எஃப்.சப்ரானா**

## 2010, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர்



யா/தும்பளை சிவப்பிரகாச ம.வித்தியாலயத்தைச் சேர்ந்த அ.கௌதம் பிரபாகர், 148 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



யா/தும்பளை சிவப்பிரகாச ம.வித்தியாலயத்தைச் சேர்ந்த ஸ்ரீ.லதுர்ஷா, 146 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



வி.விதுஷா, 146 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், யா/தும்பளை சிவப்பிரகாச ம.வித்தியாலய மாணவியாவார்.



தும்புளுவாவ முஸ்லிம் வித்தியாலயத்தில் கல்வி பயிலும் மாணவி எஃப். ஹப்ஸா, 158 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



கொத்/அல்-அரபா மு. வித்தியாலயத்தைச் சேர்ந்த பி.சஹ்னா, 157 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



கொத்/அல்-அரபா மு.வித்தியாலயத்தைச் சேர்ந்த எஃப்.சாஜிதா, 155 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



கொத்/அல்-அரபா மு.வித்தியாலய மாணவி எஃப்.ஹுஸ்னா, 146 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



தெஹியங்க அல்-அஸ்ஹர் மத்.கல்லூரியில் கல்வி கற்கும் எஃப். ராஜியா, 174 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



தெஹியங்க அல்-அஸ்ஹர் மத். கல்லூரி மாணவி எம். இந்துமதி, 160 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



சி.சுஜீவன், 151 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், வவுனியா த.மத்.ம.வித்தியாலயத்தில் கல்வி கற்கின்றார்.



வ.யதுஷன், 159 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், வவுனியா த.மத்.ம.வித்தியாலய மாணவராவார்.



**கடவளை விக்னேஸ்வரா கல்லூரி மாணவர்களான எஸ்.விரங்க *(153 புள்ளிகள்)*, லக்ஷிகா லக்ஷினி *(157 புள்ளிகள்)*, ஏ.கனிமொழி *(149 புள்ளிகள்)* ஆகியோர் தமது ஆசிரியர் கே.வடிவாம்பிகையுடன் காணப்படுகின்றனர்.**



கொத்/அல்-அரபா மு.வித்தியாலயத்தைச் சேர்ந்த ஐ.சாதிக், 153 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



கொத்/அல்-அரபா மு.வித்தியாலயத்தைச் சேர்ந்த எம்.சர்ஜூன், 153 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



கொத்/அல்-அரபா மு.வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவன் எம். ரிலான், 149 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



சி.சகீலா, 151 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், தெஹியங்க அல்-அஸ்ஹர் மத்.கல்லூரி மாணவியாவார்.



ஏ.ஹனீஸ். 148 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், தெஹியங்க அல்-அஸ்ஹர் மத்.கல்லூரியில் கல்வி கற்கின்றார்.



எம்.இஜாஸ், 145 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், தெஹியங்க அல்-அஸ்ஹர் மத்.கல்லூரியில் கல்வி கற்கின்றார்.



**தி/இ.கி.மி.சாரதா வித்தியாலயத்திலிருந்து சித்தியடைந்த மாணவர்களான *(இ.வ)* வி.திவ்யா *(143 புள்ளிகள்)*, த.பிரசாளினி *(169 புள்ளிகள்)*, வி.ஜோயிஸிமரியா *(144 புள்ளிகள்)* ஆகியோர், தமது அதிபர் திருமதி .சிவராஜசிங்கம் மற்றும் வகுப்பாசிரியர் கணபதி சரிஷ்குமார் ஆகியோருடன் காணப்படுகின்றனர்.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# குடிசன
# மேற்கெ

"அம்மா, அம்மா! இங்கே பாருங்கள்..... சரியான சனம்.... ஏன் இவ்வளவு சனம்" தொலைக்காட்சியைப் பார்த்துக்கொண்டிருந்த கமல் ஆச்சரியத்தோடு கேட்டான். "உண்மைதான்.... நமது நாட்டில் இவ்வளவு சனம் இருக்கின்றனரா என எண்ணத் தோன்றுகிறது". அம்மா தொலைக்காட்சியைப் பார்த்துக்கொண்டே கூறினார்.

"அம்மா நம் நாட்டில் எவ்வளவு மக்கள் வாழ்கிறார்கள்?" கமல் தொடர்ந்து கேட்டான்.

"தற்போது நமது நாட்டில் சுமார் 2 கோடி மக்கள் வாழ்கிறார்கள் என நினைக்கிறேன் மகனே" என அம்மா கூறினார். "அப்படியானால், இவ்வளவு பேரையும் எப்படி அம்மா கணக்கெடுப்பது? யார் இதைச் செய்வது"? என கமல் தனக்கு ஏற்பட்ட சந்தேகங்களைக் கேட்டான். அம்மா சிரித்துவிட்டு கமலுக்கருகிலிருந்த நாற்காலியில் உட்கார்ந்தவாறே "மகனே இந்த மக்கள் தொகையைக் கணக்கெடுப்பது குடிசனத் தொகை மதிப்பீட்டின்மூலமாகும். அதைக் குடிசனக் கணக்கெடுப்புத் திணைக்களமே நிறைவேற்றுகிறது' எனக் கூறினார்.



கணக்கெடுப்பதெனில் அது ஒரு கடினமான காரியமாகும். எனவே, கணக்கெடுப்புக்கு முன் சில காரியங்கள் செய்யப்பட வேண்டியுள்ளன. அவையாவன;

- அனைத்து கிராம வட்டாரங்களினதும் வரைபடங்களைத் தயாரித்தல்.
- அனைத்து கட்டடங்கள், வீடுகளின் பட்டியலைத் தயாரித்து அடையாளம் ஒட்டுதல்
- கணக்கெடுத்தல்.

மேற்கூறப்பட்டவாறு வரைபடம். தயாரித்தல் அடையாளம் ஒட்டுதல் என்பனவற்றின் மூலம் கணக்கெடுப்பு அதிகாரி மிக எளிதாகச் செயற்பட முடியும்.

## மாவட்ட ரீதியில் குடிசன மதிப்பீடு (1 மீற்றருக்கான அளவு)

| மாவட்டம் | 1971 | 1981 | 1990 | 2001 |
|---|---|---|---|---|
| கொழும்பு | 3953 | 2512 | 2870 | 3305 |
| கம்பஹா | | 1036 | 1133 | 1541 |
| களுத்துறை | 463 | 525 | 592 | 673 |
| கண்டி | 620 | 587 | 643 | 664 |
| மாத்தறை | 161 | 183 | 212 | 226 |
| நுவரெலியா | 264 | 307 | 309 | 410 |
| காலி | 455 | 504 | 578 | 613 |
| மாத்தரை | 461 | 508 | 604 | 599 |
| ஹம்பாந்தோட்டை | 136 | 170 | 204 | 210 |
| யாழ்ப்பாணம் | 756 | 896 | 929 | 529 |
| மன்னார் | 41 | 57 | 69 | 81 |
| வவுனியா | 51 | 52 | 61 | 81 |
| முல்லைத்தீவு | | 32 | 43 | 50 |
| கிளிநொச்சி | | | 76 | 105 |
| மட்டக்களப்பு | 98 | 127 | 157 | 186 |
| அம்பாறை | 65 | 92 | 113 | 140 |
| திருகோணமலை | 74 | 102 | 123 | 134 |
| குருணாகலை | 222 | 262 | 305 | 314 |
| புத்தளம் | 131 | 171 | 205 | 245 |
| அனுராதபுரம் | 58 | 89 | 106 | 112 |
| பொலன்னறுவை | 218 | 227 | 248 | 274 |
| பதுளை | 35 | 51 | 63 | 72 |
| மொனராகலை | 204 | 246 | 286 | 311 |
| இரத்தினபுரி | 329 | 405 | 441 | 463 |
| கேகாலை | 202 | 237 | 271 | 299 |

## குடிசன மதிப்பீடு என்றால் என்ன?

குடிசனக் கணக்கெடுப்பு என்பது முழுமையான மக்கள் தொகையைக் கணக்கெடுப்பதாகும். அதுவே 'குடிசன மதிப்பீடு' எனக் கூறப்படுகிறது. அதாவது, ஒரு நாட்டில் வாழும் மக்கள் தொகையைக் கணக்கெடுப்பதாகும். அத்தோடு, வீட்டுத் தொகைக் கணிப்பீடும் எடுக்கப்படுகின்றது.

## சனத்தொகையைத் தீர்மானிக்கும் காரணிகள்

ஒரு நாட்டில் மூன்று காரணிகளால் சனத்தொகை மாறுபடுகிறது.பிறப்பு, இறப்பு, குடியேற்றம் அல்லது



குடியகல்வு ஆகியனவாகும். வயது, ஆண், பெண் வேறுபாடு கூட இதில் அடங்கும்.

## கணக்கெடுப்பு

பெருந்தொகையான மக்கள் தொகையினரைக்



## குடிசனக் கணக்கெடுப்பால் கிடைக்கும் தகவல்கள்

பிரதான நோக்கம் குடிசனத்தொகையைக் கணக்கிடுவதாகும். அத்தோடு, மேலும் சில தகவல்களும் இதன் மூலம் பெறப்படுகின்றன. பிறந்த தினம், ஆண், பெண் வேறுபாடு திருமணம் புரிந்த, திருமணம் புரியாத எனும் வித்தியாசத்தில் வீட்டின் பிரதான உரித்தாளிக்குரிய குடும்ப உறவு ஆகிய தகவல்களும் பெறப்படுகின்றன. அவற்றோடு, கல்வித்தராதரம் அகதிகள் குடியேற்றம் பற்றிய தகவல்கள், தொழில்கள் பற்றிய

விபரங்கள், அங்கவீனர் பற்றிய விபரங்கள், வீடுகளின் விபரங்கள் ஆகியனவும் அவற்றில் அடங்கும்.

## குடிசன மதிப்பீட்டின் வரலாறு

இதற்கு நீண்டகால வரலாறு உண்டு. 1871 ஆம் ஆண்டி[illegible]யே இலங்கைக்[illegible] முதன் முதலில் அதிகாரபூர்வமான குடிசனக் கணிப்பீடு செய்யப்பட்டது. அன்றிலிருந்து பத்து வருடங்களுக்கு ஒரு முறை சர்வசனக் கணக்கெடுப்பு நிகழ்கிறது. அதன்படி 2001 ஆம் ஆண்டு கணக்கெடுப்பு நிகழ்ந்தது. இதற்கு முன் 1981 இல் இக் கணிப்பீடு நிகழ்ந்து பின்னர் 1991 ஆம் ஆண்டில் இக்கணக்கெடுப்பு நிகழவில்லை. அதாவது, 20 வருடங்களாக இக் கணக்கெடுப்பு நிகழவில்லை.

## குடிசனத் தகவல்களினால் கிடைக்கும் பயன்கள்

ஒழுங்கான குடிசன மதிப்பீட்டின் மூலம் ஒரு நாட்டில் அபிவிருத்தித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க் கணக்கெடுப்பு ள்ளப்படும் முறை

திட்டங்களை வகுத்து அவற்றை செயற்படுத்தமுடியும். மக்கள் தொகை, வீடுகளின் தொகை ஆகிய வற்றின்மூலம் பெறும் தகவல்களால் சிறந்த அபிவிருத்தித் திட்டங்களை செயற்படுத்த முடியும்.

✱ அரசின் கொள்கைகளை வகுப்ப தற்கும் திட்டமிடுவதற்கும் குடிசனத் தொகை மதிப்பீடு உதவுதல்.

✱ அரச மற்றும் தனியார் துறை உத்தி[illegible]ாகங்கள் வழங்கப்படுவதற் குத் தேவையான தகவல்களைத் தேடிப் பயன்படுத்த குடிசனத் தொகை மதிப்பீடு உதவுதல்.

✱ கல்விக்குரிய தீர்மானத்தை எடுக் கும்போது, குடிசனத் தொகை மதிப்பீடு பயன்படல். (பாடசாலை செல்லும் பாடசாலை செல்லாத பிள்ளைகள் பற்றிய விபரங்கள்)



✱ சுகாதார மற்றும் மருத்துவப் பாதுகாப்பு வசதிகளைத் திட்ட மிடவும் குடிசனத் தொகை மதிப்பீடு அவசியமாகின் றது. (படுக்கை உபகரணங் கள், மலசல கூடம், மின்சா ரம், தண்ணீர்) ஆகியவற் றைத் திட்டமிட்டு வழங்க வும் தகவல்கள் பயன்படு கின்றன.

✱ வெளிநாட்டு உதவி களால் பிரதேசங்கள் தோறும் அபிவிருத்தியைச் செயற்படுத்தவும் குடிசன மதிப்பீடு பயன்படுகின்றது.

✱ உத்தியோகம் புரிவோர் உத்தியோகமற்றோர் ஆகியோரின் எண்ணிக்கைகளை அறிவதோடு, உத்தியோகம் வழங்கவும் தொழிற் பயிற்சியளிக்கவும் குடிசன மதிப்பீடு பயன் கொடுக்கின்றது.

## புதிய கணக்கெடுப்பு முறை

மக்கள் தொகை மற்றும் வீடுகள் பற்றிய இக்கணக்கெடுப்பு மீண்டும் இவ்வாண்டு 2011 இல் எடுக்கப்படு கிறது. இது இலங்கையின் 14 ஆவது மக்கள் தொகை மற்றும் வீடுகள் பற்றிய கணக்கெடுப்பாகும். இது முன்பு நிகழ்ந்தவற்றை விடவும் வித்தி யாசமான முறையில் அமையும். அதாவது, குறிப்பிட்ட காலத்தில் அனைவரையும் ஒரேநேரம் கணக்கெ டுப்பதற்குப் பதிலாக இரு வாரங் களில் வீடுதோறும் வந்து ஒவ்வொரு வரையும் கணக்கெடுக்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

## மக்கள் தொகைக் கட்டமைப்பு

**பிறப்பு விகிதம்:** வருடாந்தம் குடிசனத் தொகையில் 1,000 பேருக்குப் பிறக்கும் தொகையைக் குறிக்கும். இந்த அட்டவணை மக்கள் தொகை அதிகரிப்பை நிர்ணயிக்கப் பயன்படுத்தப்படும் அடையாளமாகும்.

**இறப்பு விகிதம்:** வருடாந்தம் குடிசனத் தொகையில் 1000 பேருக்கு அவ்வருடத்துக்குள் நிகழும் மரணத் தொகையின் மதிப்பீட்டு விகிதமா கும். இதுவும் சனத்தொகை அதிகரிப் பைக் கணிக்க உபயோகப்படும் இன்னொரு அடையாளமாகும்.

**அகதிகள் விகிதம்:** **மக்கள் தொகை அதிகரிப்பை முடிவு செய்கையில் உபயோகமாகும் இன்னுமொரு பெறுமதிமிக்க அடையாளம் அகதிகள் விவகாரமா கும். வருடாந்தம் குடியேறுவோரின் தொகை மற்றும் வருடாந்தம் குடியகல்வோரின் தொகை என்பன இதன்மூலம் கணக்கெடுக்கப்படும்.**

**ஆண்,பெண் எண்ணிக்கை:** இதுவும் சனத் தொகைக் கணக்கெடுப்பின் முக்கிய நோக்கமாகும். 100 பெண்களுக்கு எத்தனை ஆண்கள் எனப் பார்ப்பதே இதன் நோக்கமாகும்.

**உழைப்பு முயற்சியாளர்:** குடிசனக் கணக் கெடுப்பில் உழைக்கும் முயற்சியாள ரும் தகவலில் சேர்க்கப்படுவர். பொரு ளாதார ரீதியில் செயற்பாடுள்ளோர் 'உழைப்பு முயற்சியாளர்' எனப்படுவர். இவர்கள் தொழிலுள்ளோர், தொழிலற்றோர் என வகுக்கப்படுவர். இதன்படி, 2008 ஆம் ஆண்டில் தொழிலற்றோரின் தொகை 80 இலட்ச மாக இருந்தது.

**சாரதா விகிதம்:** சனத்தொகை அதிகரிப்பில் தீர்க்கமான இன்னுமொரு காரணி என 'சாரதா' விகிதத்தைக் குறிப்பிடலாம். பெண்களின் வாழ்வில் அவர்கள் பெறும் குழந்தைகளின் தொகையே 'சாரதா' விகிதம் என அழைக்கப்படுகிறது.


**ஏ.ஜே.எம்.நிழாம்**


## இலங்கையில் குடிசனக் கணக்கெடுப்பு நிகழ்ந்த வருடங்கள்


இலங்கையில் கணக்கெடுப்பு நிகழ்ந்த வருடங்களே கீழே தரப்பட்டுள்ளன.


| | | | | |
|---|---|---|---|---|
| 1871 | 1991 | 1931 | 1963 | 2001 |
| 1881 | 1911 | 1945 | 1971 | |
| 1891 | 1921 | 1953 | 1981 | |

இந்த வகையில் சில கால கட்டங்களில் பல கணக்கெடுப்புக்கள் நிகழ்ந்துள்ளன. 1931 ஆம் ஆண்டு குறிப்பிட்ட அளவுதான் கணக்கெடுப்பு நிகழ்ந்துள்ளது. காரணம் உலகப் பொருளாதார வீழ்ச்சியாகும். 1941 ஆம் ஆண்டிலும் 1951 ஆம் ஆண்டிலும் நிகழவேண்டிய கணக்கெடுப்புக்கு 1943 ஆம் ஆண்டிலும் 1953 ஆம் ஆண்டிலும் நிகழ்ந்தன. இதற்குரிய காரணமாக இரண்டாம் உலக மகா யுத்தம் அமைந்தது.




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



தலைநகரின் வான்வழித் தோற்றம்
மாலபோ சர்வதேச விமானநிலையம்

# ஈக்வடோரியல் கினியா




மாலபோ நகரிலுள்ள கிறிஸ்தவ தேவாலயம்

**அரசு:** ஒரு சட்ட சபையைக்கொண்ட பல கட்சிக் குடியரசு.
**சுதந்திரம்:** ஸ்பெய்னிடம் இருந்து 1968 ஒக்டோபர் 12.
**தேசிய பெயர்:** ரிப்பப்ளிக்கா டி கினியா ஈக்வடோரியல்.
**தேசிய தினம்:** ஒக்டோபர் 12, சுதந்திர தினம்.
**அதிபர்** (1979): டியோடரோ ஒபியாங் நுகுமே பஸோகோ.
**பிரதமர்** (2008): இக்நாசியோ மிலம் டேங்க்.

## புவியியல்

'ஸ்பெனிஷ் கினி' என முன்னர் அழைக்கப்பட்ட ஈக்வடோரியல் கினியா, பல தீவுகளை உள்ளடக்கிய ஒரு மேற்கு ஆபிரிக்க கரையோர நாடாகும். இதன் தெற்கு மற்றும் கிழக்கில் கெபொன் அமைந்துள்ளது. வடக்கில் கெமரூன் அமைந்துள்ளது. ஆபிரிக்க பெருநிலப்பரப்பில் அமைந்த பகுதியானது மிக ஒடுங்கிய கடற்கரையோரச் சமவெளியாகும். ஆனால், கெபொன் எல்லைப்பிரதேசம் உயர்ந்த பீடபூமியையும் அடர்ந்த காடுகள் உள்ள மலைகளையும் கொண்டுள்ளது. சில இடங்கள் கடல் மட்டத்திலிருந்து 4,000 அடி வரை உயர்ந்து செல்கின்றன.மிக முக்கிய நதியாகிய யுஓலா நதி நாட்டின் மத்திய பகுதியை ஊடறுத்துப் பாய்கின்றது. பியோகோ தீவில் எரிமலைகள் காணப்படுகின்றன.

**மொத்தப் பரப்பு:** 10,830 ச.மைல் (28,050 ச.கி.மீற்றர்).
**நிலப்பிரிவுகள்:** 7 மாகாணங்கள்.
**தலைநகரமும் பெரிய நகரமும்:** மாலபோ.
**உயர்மலைச் சிகரம்:** பிகோ பெசிலி (3,008 மீற்றர்).

**தாழ்மையம்:** அட்லாண்டிக் சமுத்திரம்.
**சனத்தொகை** (2010): 650,702.
**நாணயம்:** CFA ஃப்ரேங்க்.
**மொழிகள்:** ஸ்பெனிஷ், பிரெஞ்ச் (இரண்டும் உத்தியோகபூர்வ மொழிகள்); ஆங்கிலம், ஃபேங்க், புபி, கிபோ, பிட்கின்.
**இனக்குழுக்கள்:** பியோகோ, ரியோ முனி, 1000 இற்கும் குறைவான ஐரோப்பியர்கள் (பெரும்பாலாக ஸ்பானியர்கள்).
**சமயங்கள்:** பொதுவாக, கிறிஸ்தவம் மற்றும் ரோமன் கத்தோலிக்கர்களின் ஆதிக்கம் அதிகம்.
**எழுத்தறிவு** (2003): 80%
**இணையத்தளக் குறியீடு:** .gq
**தொலைபேசிக் குறியீட்டு இலக்கம்:** 240
**தேசிய கீதம்**


Caminemos pisando la senda
De nuestra inmensa felicidad.
En fraternidad, sin separación,
Cantemos Libertad!...என
ஆரம்பமாகின்றது.



தேசிய இலச்சினை


ஜனாதிபதி


பிரதமர்


எரீனா ப்ளென்கா கடற்கரை
மாலபோ துறைமுகம்

## வரலாறு

இந்நாட்டின் பூர்வீக குடிகள் பிக்மிஸ்கள் ஆவர். ஃபேங்க் மற்றும் புபி இன மக்கள் 17 ஆம் நூற்றாண்டில் இடம்பெயர்ந்து இங்கு வந்துள்ளனர். பியோகோ என அழைக்கப்படும் பிரதான தீவில் இம்மக்கள் 19 ஆம் நூற்றாண்டில் குடியேறினர். 18 ஆம் நூற்றாண்டில் போர்த்துக்கேயர், ஈக்வடோரியல் கினியா உள்ளிட்ட சில பகுதிகளை ஸ்பானியர்களுக்கு கையளித்தனர். 1827 முதல் 1844 வரை பிரித்தானியரின் நிர்வாகத்தின்கீழ் சில பகுதிகள் இருந்தபொழுதிலும் ஸ்பெய்ன் அவற்றை மீண்டும் பெற்றுக்கொண்டது. 1968 ஒக்டோபர் 12 ஆம் திகதி இந்நாடு ஸ்பெய்னிடமிருந்து சுதந்திரமடைந்தது.

## கலாசாரம்

ஈக்வடோரியல் கினியாவின் கலாசாரமானது, வளமான - தொன்மையான பாரம்பரியங்களையும் சடங்குமுறைகளையும் பாடல்களையும் கொண்டுள்ளது. ஃபேங்க் மற்றும் பியோகோ இன மக்களின் கலாசாரத்தில் ஸ்பானிய கலாசாரப் பாரம்பரியங்களின் தாக்கம் பெரிதளவு காணப்படுகின்றது. பெரும்பாலான புபி விவசாயிகள் இன்றுவரை தமது தொன்மையான கலாசாரங்களைப் பேணிப் பாதுகாக்கின்றனர். பலேலி நடனம், கரையோரப் பகுதியில் பெரும் செல்வாக்குப் பெற்றுள்ளது.

## காலநிலை

பூமத்தியகோட்டிலிருந்து சற்று விலகி வடக்கே அமைந்திருக்கும் இந்நாட்டில் பெரும்பாலும் மிகவும் வெப்பமான காலநிலையே நிலவுகின்றது. வருடத்தில் ஏப்ரல்-ஒக்டோபர் வரையிலான காலத்தில் மழை பொழியும்.

## தொடர்பாடல்

**தொலைபேசிகள்** (2005): பிரதான தொலைபேசிப் பாவனையாளர்கள் 10,000; கையடக்கத் தொலைபேசிப் பாவனையாளர்கள் 96,900. **வானொலி ஒலிபரப்பு நிலையங்கள்** (2002): FM 3, SW 5. **தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையங்கள்** (2006): 19. **இணையத்தள வழங்குனர்கள்** (2007): 81; இணையத்தளப் பாவனையாளர்கள்: 8,000.


## போக்குவரத்து

**நெடுஞ்சாலைகள்** (1999): மொத்தம் 2,880 கி.மீ. **துறைமுகம்:** மாலபோ. **விமான நிலையங்கள்** (2007): 5.

## பொருளாதாரம்

**விவசாயம்** (பயிர்ச்செய்கை நிலம் 5%) **மற்றும் விலங்கு வேளாண்மை:** கோப்பி, கொக்கோ, கால்நடைகள், நெல், வாழைப்பழம். **கைத்தொழில்கள்:** பெற்றோலியம், மீன்பிடி, மரத்தொழில். **இயற்கை வளங்கள்:** பெற்றோலியம், மரங்கள், களிமண், சிலவகைக் கனிமங்கள்.




**ஏற்றுமதிகள்** (2009): பெற்றோலியம், மரங்கள், கொக்கோ. **இறக்குமதிகள்** (2009): பெற்றோலியத் துறைசார் உபகரணங்கள், ஏனைய இயந்திரசாதனங்கள். **பிரதான வர்த்தக பங்காளிகள்** (2004): ஐக்கிய அமெரிக்கா, சீனா, ஸ்பெய்ன், தாய்வான், பிரான்ஸ், இத்தாலி, போர்த்துக்கல்.

## பிரசித்தி பெற்ற இடங்கள் சில...

✱ பியோகோ தீவு ✱ பிகோ மாலபோ எரிமலை ✱ பிகோ பெசிலி ✱ எரீனா ப்ளென்கா கடற்கரை ✱ மொன்ட் எலன் தேசிய வனவிலங்கியல் பூங்கா ✱ மோகோ நீர்வீழ்ச்சி.


உயர் மலைச்சிகரம் - பிகோ பெசிலி


பியோகோ தீவு



கல்தேரா ஏரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடிகாரத்தின் கதை


சரியான நேரத்தை அறிந்துகொள்வதற்காக இயந்திரம், கடிகார முள் போன்றவற்றை பயன்படுத்த ஆரம்பித்ததோடு, நேரத்தை துல்லியமாக காட்டும் விடயமானது மென்மேலும் அபிவிருத்தி அடைந்தது. இக் கடிகார உற்பத்திப் படிமுறையின்படியே முறையான தொங்கு கடிகாரம் தயாரிக்கப்பட்டது. எனினும், மனிதனின் வினைத்திறனை மெருகூட்டுவதற்கும் முன்னேற்றுவதற்கும் மேன்மேலும் சரியான நேரக் கணிப்பை அறிந்துகொள்ளவும் கடிகாரத்தை தன்னுடனேயே எடுத்துச் செல்லும் தேவையும் மனிதனுக்கு ஏற்பட்டது. இதனால், கையில் கட்டிச்செல்லும் கைக்கடிகாரங்கள் தயாரிக்கப்பட்டன. அத்துடன், மணித்தியாலக் கணக்கின்படி நேரத்தை அறிந்த மனிதன் நிமிட முள் கண்டுபிடிக்கப்பட்டதோடு, மென்மேலும் சரியான நேரத்தை அறியும் வாய்ப்பும் கிடைத்தது. அதன்பின் விநாடி முள் கண்டுபிடிக்கப்பட்டது. காலத்திற்குக் காலம் உலகில் தோன்றிய அறிவியல் கண்டுபிடிப்புக்களே அதற்கு காரணமாக அமைந்தன. நேரத்தைக் கணிக்கும் கருவியின் கதை என்னும் தலைப்பில் ஏற்கனவே இதுபற்றிய சில விடயங்களைப் பார்த்தோம். மேலும் சில தகவல்களை இங்கு பார்ப்போம்.

## தலை முகமுள்ள மேசைக் கடிகாரம்



கி.பி.1650 ஆம் ஆண்டு எட்வர்ட் ஈஸ்ட் என்பவரால் மேசைக் கடிகாரம் தயாரிக்கப்பட்டது. சுருள் வடிவ 'வில்' போன்ற அமைப்பில் சேமிக்கப்பட்டுள்ள மீள் சக்தியின் மூலம் இது செயற்படுகின்றது. இந்த மேசைக் கடிகாரத்தின் 'வைன்டர்' எனப்படும் சாவி ஒரு சங்கிலி மூலம் எந்நேரமும் கடிகாரத்துடன் இணைக்கப்பட்டிருக்கும்.

## பெண்டுலம் (PENDULUM) எனும் ஊசல் கடிகாரம்



கலிலியோ கலிலி கி.பி.1564 இல் இத்தாலி நாட்டின் பீசா (பைசா) நகரில் பிறந்த சாதனை மிகு பௌதிக விஞ்ஞானியாவார். கி.பி. 1581 இல் பீசா நகர தேவாலயத்திற்கு அவர் அணையா விளக்கொன்றை நிர்மாணித்து வழங்கினார்.


அத்தோடு, கலிலியோ கலிலி 'பெண்டுலம்' எனும் ஊசல் பொறிமுறை குறித்த ஆய்வில் ஈடுபட்டார். அதன்மூலம் கட்டியெழுப்பப்பட்ட எண்ணக் கருவால் பிழையற்ற சரியான நேரத்தைக் காட்டும் கடிகாரம் ஒன்றை உருவாக்கும் வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது.

## தோமஸ் டெம்பியனின் கடிகாரம்



கலிலியோ கலிலியால் உருவாக்கப்பட்ட ஊசல் பொறிமுறையானது தோமஸ் டெம்பியனால் உருவாக்கப்பட்ட கடிகாரத்திற்கு அடித்தளமாக அமைந்தது.


## முதலாவது ஊசல் கடிகாரம்



கி.பி.1957 இல் ஹய்ஜின்த் அவர்களால் முதலாவது ஊசல் கடிகாரம் தயாரிக்கப்பட்டது. கி.பி.1670 இல் வில்லின் சமநிலையைப் பயன்படுத்திக் கடிகாரம் ஒன்றைத் தயாரிப்பதற்கு ஹுக்கின் கண்டுபிடிப்பு பயன்பட்டது.

## கைக்கடிகாரம்

முதலாவது ஊசல் கடிகாரம் உற்பத்தி செய்து இரு வருடங்கள் கழிந்த பின் தோமஸ் அர்ன்ஷோ மைன்டர் என்பவர் சாவியுடன் கூடிய கைக்கடிகாரம் ஒன்றைத் தயாரிப்பதில் வெற்றி கண்டார். இது காற்சட்டைப் பையில் எடுத்துச் செல்லக் கூடிய அளவு சிறியதாகும். கி.பி.1752 இல் 'வைன்டர்' சாவி இல்லாத கடிகாரமானது பாரிய மாற்றங்கள் ஏற்படுவதற்கு வழிகோலியது. இது படிப்படியாக கைமணிக்கட்டில் கட்டுமளவிற்கு முன்னேறியது.



1905 இல் அல்பட் ஐன்ஸ்டன் எனும் மாபெரும் விஞ்ஞான மேதையால் காலம்-இடம்-பொதுத் தொடர்புத் தத்துவம் முன்வைக்கப்பட்டது. அது காலத்தைக் கணிப்பதற்கு புதிய எண்ணக் கருவைத் தோற்றுவிக்க மூலகாரணமாக அமைந்தது.

## நிமிட முள்




நீண்ட காலமாக நடைமுறையிலிருந்த மணித்தியாலங்களை மட்டும் காட்டும் மணித்தியால முள்ளோடு, காலப்போக்கில் நிமிடமுள்ளுடன் கடிகாரத்தில் இணைந்துகொண்டது. இந்த நிமிட முள் மென்மேலும் சரியான நேரத்தைக் காட்டுவதற்கு அடித்தளமிட்டது.

## 'பிக் பென்' கடிகாரம்

'பிக்-பென்' அல்லது 'வெஸ்ட்மினிஸ்டர்' கடிகாரமானது உலகப் புகழ்பெற்றதாகும். (இங்கிலாந்தின்) பிரித்தானிய நாடாளுமன்றத்தில் அமைந்துள்ள இக் கடிகாரத்திற்கு 'பிக்-பென்' எனப் பெயர் வரக் காரணம் நேரத்தை நினைவுபடுத்துவதற்காக ஒலிக்கும் மணியோசை 'பிக்-பென்' என்ற சத்தத்தை வெளியிடுவதேயாகும்.



## கிரீனிச்



புவியியல் மாணவர்களுக்கு நன்கு பரிச்சயமான இப் பெயர் கி.பி. 1884 இல் ஐக்கிய இராச்சியத்தின் தலைநகர் லண்டன் மாநகரில் வைத்துக் கணிக்கப்பட்ட 'கிரீனிச்' எனும் மத்திய நெட்டாங்கு (நெடுங்கோடு) ஆகும். இது ஒரு கற்பனைக் கோடு, இதன்படி உலகிலுள்ள சகல நாடுகளும் ஏற்றுக் கொள்ளக்கூடிய சர்வதேச நேரக்கணிப்பிற்கான இணக்கப்பாடு ஏற்பாட்டது. உலகம் 15 பாகை நெட்டாங்கு நேர வலயம் 24 வலயங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. கிரீனிச் மத்திய நெட்டாங்கு ரேகை மீது நண்பகல் 12.00 மணிக்கு சூரியஒளி நேர் உச்சியில் பிரகாசிக்கும். சகல நேர வலயங்களும் இந்த மத்திய நெடுங்கோட்டுக்கு முன்பதாகவோ, பின்னராகவோ அமைந்திருக்கும். அதன்படி, குறித்த நெடுங்கோட்டின் மீது அமைந்துள்ள நாடுகள் அதன்படி நேரத்தைக் கணிக்கும்.

இரஞ்சித் ஜெயகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## வினாத்தாள் - 1 (கடந்த வாரத் தொடர்ச்சி)

பெயர்: .................................................. நேரம்: 45 நிமிடங்கள்

26. 5 பசுக்கள் 5 சாக்குப் புல்லை 5 நாட்களில் சாப்பிட்டு முடிக்குமாயின், ஒரு பசு 5 சாக்குப் புல்லை சாப்பிட்டு முடிப்பதற்கு எவ்வளவு காலம் எடுக்கும்?

(1) 5 நாட்கள் (2) 25 நாட்கள் (3) 1 நாள்

27. முதல் மூன்று உருக்களையும் அவதானித்து வெற்றிடத்தில் வரவேண்டிய நான்காவது உருவைத் தெரிவு செய்க.



(1) (2) (3)

28. 20m நீளமுடைய சதுர வடிவான காணி ஒன்றிற்கு 5m இடைவெளியில் வேலிக்கட்டைகள் நடப்பட்டுள்ளன. அக்காணியைச் சுற்றி வேலி அடைப்பதற்கு எத்தனை வேலிக்கட்டைகள் தேவை?

(1) 20 (2) 16 (3) 96

★ *29 ஆம், 30 ஆம் வினாக்களில் முதற்கூட்டில் உள்ள இரண்டு எண்களுக்கும் பதிலாக சரியான எண்ணைக்கொண்ட கூட்டைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.*

29. [60x2] + 50 = 170 (1) [40x3] (2) [10x6] (3) [30x5]

30. [XV-IV] + VI = XVII (1) [X+V] (2) [VII+V] (3) [VI+V]

31. குமாரிலும் பார்க்க லவன் நிறை கூடியவன். குமாரும் பிரமனும் சமநிறையுள்ளவர்கள். பிரமனிலும் பார்க்க கஜன் நிறை குறைந்தவன். இங்கு நிறை கூடியவன் யார்?

(1) பிரமன் (2) கஜன் (3) லவன்

32. கிராமம் ஒன்றில் அதிகமாகக் காணப்படுவது;

(1) குளங்கள் (2) வீதிகள் (3) வீடுகள்

33. கஜீவன் பாடசாலையை நோக்கிச் செல்லும்போது, அவனது நிழல் வலது பக்கமாக விழுவதைக் கண்டான். அவ்வாறெனின், அவன் எத்திசை நோக்கிச் செல்கின்றான்?

(1) கிழக்கு (2) மேற்கு (3) தெற்கு

34. பின்வரும் பந்தியில் ஒரு பகுதி வெட்டி நீக்கப்பட்டுள்ளது. வெட்டி நீக்கப்பட்ட பகுதியைத் தெரிவு செய்க.

பேராதனையிலிருந்து கண்டி மாநகருக்குச் சென்றோம். இயற்கை எழிலோடு சேர்ந்த [ ] அழகிய நகரம் அது. பூத்துக் குலுங்கும் மரங்களும் தெப்பக்குளமும் அருகே தலதா [ ] கண்டி மாநகரைத் தேவலோகம் போலத் திகழச் செய்தன. எல்லாவற்றையும் [ ] களித்தோம். இதற்குப் பொருத்தமான பகுதியை தெரிவு செய்க.

(1) ஓர் / மாளிகையின் தங்கக்கூரையும் / கண் குளிரக் கண்டு

(2) ஒரு / மாளிகையின் தங்கக்கூரையும் / மனம் குளிரக் கண்டு

(3) ஒரு / மாளிகையின் வீட்டுக்கூரையும் / கண் குளிரக் கண்டு

★ *35 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்களுக்கு விடைகளை புள்ளிக்கோட்டில் எழுதுக.*

35. புதிரில் மறைந்துள்ள சொல்லைக் கண்டுபிடித்து, அதனை புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

இது வீட்டுப் பாவனைப் பொருள். முதலாம் எழுத்து கண்ணில் உண்டு; காதில் இல்லை. இரண்டாம் எழுத்து பத்தில் உண்டு; இருபதில் இல்லை. மூன்றாம் எழுத்து திங்களில் உண்டு; செவ்வாயில் இல்லை. அது என்ன?

..................................................


36. அடைப்புக்குள் தரப்பட்டுள்ள சொற்களைப் பயன்படுத்தி கீழே தரப்பட்டுள்ள கோலத்தில் எழுதுக.

| டில்லி, வங்கி, குஞ்சு, விறகு, கிழவி, சுண்டி |
|---|


✱ வங்கி → கிழவி → விறகு → .......... → .......... → ..........




37. உருவில் காட்டப்பட்டுள்ள பாதை வழியே குமார் A என்ற இடத்தில் இருந்து நடந்து பாடசாலையை அடைந்தான். அவன் பாடசாலையை அடையும் வரையிலும் எத்தனை தடவைகள் வலப்பக்கமாகத் திரும்பினான்?





..................................................

38.  தரப்பட்டுள்ள உருவை அமைப்பதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ள சதுரமுகிகளின் எண்ணிக்கை யாது?

..................................................

39. பின்வரும் படங்களில் காட்டப்பட்டுள்ள நிகழ்ச்சிகளின் ஒழுங்கைச் சரியாகக் காட்டுவதற்கு அவற்றின்கீழ் 1, 2, 3, 4, 5 ஆகிய எண்களை எழுதுக.



(..................) (..................) (..................) (..................) (..................)

40. பல்வேறு நிறங்கள் தீட்டப்பட்ட மரச் சதுரமுகி ஒன்றின் இரு நிலைகள் கீழே காட்டப்பட்டிருக்கின்றன.




இச்சதுரமுகியில் நீல நிறம் பூசப்பட்ட பக்கத்திற்கு எதிரான பக்கத்தின் நிறம் யாது?

..................................................

### வினாத்தாள்-1 இன் விடைகள்

*(மார்ச் 02,09 ஆம் திகதிகளில் பிரசுரமானவை)*

| | | | | |
|---|---|---|---|---|
| (01) 3 | (02) 2 | (03) 2 | (04) 3 | (05) 2 |
| (06) 2 | (07) 3 | (08) 2 | (09) 2 | (10) 3 |
| (11) 2 | (12) 2 | (13) 3 | (14) 2 | (15) 2 |
| (16) 2 | (17) 2 | (18) 2 | (19) 2 | (20) 3 |
| (21) 3 | (22) 1 | (23) 2 | (24) 3 | (25) 3 |
| (26) 2 | (27) 3 | (28) 2 | (29) 1 | (30) 3 |
| (31) 3 | (32) 3 | (33) 3 | (34) 1 | (35) கத்தி |
| (36) குஞ்சு கண்டி டில்லி | | (37) 3 தடவைகள் | | (38) 26 |
| (39) 2 - 4 - 1 - 3 - 5 | | (40) சிவப்பு | | |

## ஷ்... உங்களுக்கு மட்டும்!

✱ பேனாவை முதன் முதலில் உருவாக்கியவர்கள்- எகிப்தியர்கள்.



✱ முகப் பவுடரைத் தயாரித் தவர்கள்- இத்தாலியர்கள்.

✱ உயில் எழுதும் முறையைத் தோற்றுவித்தவர்கள்- ரோமானியர்கள்.

✱ முதன் முதலில் சூரியஒளியால் ஓடும் காரை அறிமுகப்படுத்திய நாடு- ஸ்பெய்ன்.



✱ மிருகங்களில் தந்திரமுள்ளது- நரி. பறவைகளில் தந்திரமுள்ளது- காகம்.

✱ உலகில் 'வானத்தின் நெற்றி' என்று வர்ணிக்கப்படும் சிகரம்- எவரெஸ்ட்.



✱ உலகில் மிகக்குறுகிய ரயில் சேவை அமுலில் உள்ள இடம்-வத்திக்கான்.

✱ ஏப்ரல் மாதத்தின் முதல் நாளை மீன்கள் தினமாகக் கொண்டாடும் நாடு- பிரான்ஸ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘ஃபேஸ்புக்’கில் தவிர்க்கப்பட வேண்டியவை



**தொழில்நுட்பம் வளர்ச்சியடையாத காலத்தில் பொழுதுபோக்கிற்காக கடிதமூலம் பேனா நண்பர் (Pen Friend) தொடர்பு வைத்திருந்ததைப் போல், இன்று இளைய தலைமுறையினர் உட்பட, வயது வந்தோர்கூட ஃபேஸ்புக் (facebook) இணையத்தளத்தை உபயோகித்து உலகம் முழுவதும் நண்பர்களை உருவாக்கி-உறவாடி சுவாரஸ்யமடைகின்றனர்**

நண்பர்களாக உறவாடி அறிவையும் அனுபவங்களையும் பகிர்ந்துகொள்வதை நோக்காகக்கொண்டே, மார்க் ஷுக்கர் தனது 19 ஆவது வயதில் ஃபேஸ்புக்கை ஆரம்பித்தார். 2010 ஆம் ஆண்டின் சிறந்த உதாரண புருஷராக ‘டைம்’ சஞ்சிகை அவரைத் தெரிவு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஃபேஸ்புக் ஆனது ஒரு சமூக வலைப்பின்னல் இணையத்தளமாக 2004 பெப்ரவரி மாதம் அறிமுகப்படுத்தப்பட்டது. இன்றுவரை 550 மில்லியன் அங்கத்தவர்களைக்கொண்டுள்ளதுடன், 75 இற்கும் மேற்பட்ட உலக மொழிகளில் இயங்கி வருகின்றது. இதுவரை உலக மக்களில் பதினான்கு பேர்களில் ஒருவர் ஃபேஸ்புக்கில் அங்கத்துவம் பெற்றுள்ளதாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

எனினும், அண்மைக்காலமாக இந்த ஃபேஸ்புக் பாவனையானது பலரையும் பல்வேறு சிக்கல்களுக்கு ஆளாக்கி வருவதாக செய்திகள் வெளியாகி வருகின்றன. இதனால், பல் நாடுகளில் இந்த இணையத்தளமானது தடைசெய்யப்பட்டும் இருக்கின்றது. சில பெற்றோர்கள் கூட தமது பிள்ளைகளுக்கு ஃபேஸ்புக் பாவனைக்குத் தடை விதித்திருப்பதாக அறிய முடிகின்றது.

SL-CERT சிரேஷ்ட தொழில் தகவல் தொழில்நுட்ப பாதுகாப்பு பொறியியலாளரான ரோஹன பள்ளியகுருவின் தகவலின் படி; ஃபேஸ்புக் பற்றிய முறைப்பாடுகள் இலங்கையில் தற்போது அதிகளவில் குறைந்திருப்பதாக அறிய முடிவது மனதுக்கு ஆறுதல் தரும் விடயமாகும். ஆறு மாதங்களுக்கு முன்னர் நாளொன்றுக்கு சுமார் 15-20 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்ற போதிலும், தற்போது அது நாளொன்றிற்கு 5-6 ஆகக் குறைந்திருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், அண்மையில் மலேசியப் பத்திரிகையொன்று தகவல் தொழில்நுட்ப பாதுகாப்பு நிபுணரான டேவிட் வைட்லெக் என்பவர் கூறியதாக சில தகவல்களை வெளியிட்டிருந்தது.அதில் ஃபேஸ்புக் அங்கத்தவர்கள் எல்லைமீறி தமது தகவல்களையும் படங்களையும் ஃபேஸ்புக்கில் உள்ளீடு செய்வதன் மூலமாகவே, பிரச்சினைகளையும் குளறுபடிகளையும் ஆபத்துக்களையும் சந்திக்க நேரிடுகின்றது என்று குறிப்பிடப்பட்டிருந்தது. அவர் தரும் தவிர்க்கப்பட வேண்டிய விடயங்கள் சிலதை ‘விஜய்’ வாசகர்களுக்காகத் தொகுத்துத் தருகின்றோம்.




**‘அண்மைக்காலமாக ஃபேஸ்புக் பாவனையானது பலரையும் பல்வேறு சிக்கல்களுக்கு ஆளாக்கி வருவதாக செய்திகள் வெளியாகி வருகின்றன. இதனால், பல நாடுகளில் இது தடைசெய்யப்பட்டும் இருக்கின்றது. சில பெற்றோர்கள்கூட தமது பிள்ளைகளுக்கு ஃபேஸ்புக் பாவனைக்குத் தடை விதித்திருப்பதாக அறிய முடிகின்றது’**

## தவிர்க்க வேண்டியவை

ஃபேஸ்புக்கில் படங்களையோ, தகவல்களையோ உள்ளீடு செய்வதானது ஒருவரை பிரச்சினையில் சிக்கவைக்கவும் அதை விட மோசமான ஆபத்தையும் ஏற்படுத்தக்கூடியதுமாகும். கணினி மூலம் மேற்கொள்ளப்படும் திருட்டு ‘Data mining’ என்றழைக்கப்படுகின்றது. இதன்மூலம் ஃபேஸ்புக்கில் ஊடுருவி பிறந்த திகதி, தொலைபேசி இலக்கம், முகவரி போன்றவற்றை இனந் தெரியாத ஒருவர் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு அதிகமாக உள்ளதாக டேவிட் குறிப்பிட்டுள்ளார்.

ஃபேஸ்புக்கில் சேர்க்கக்கூடாத விடயங்களில் பிறந்த திகதியும் இடமும் முதலிடத்தைப் பெறுகின்றன. இணையத்தளங்களில் கடவுச்சொல்லை (Password) மீளமைக்கின்றபோது, பொதுவாக பாதுகாப்புக் கேள்வியாக இவற்றிலொன்று கேட்கப்படுகின்றது. ஓர் இணையத்தள ஊடுருவல் குற்றவாளி இதனைக்கொண்டு ஒருவரின் கடவுச் சொல்லை மீளமைத்தால் அவரது வங்கிக் கணக்கில் ஊடுருவுவது மட்டுமல்லாது; எதை வேண்டுமானாலும் செய்யக்கூடிய சந்தர்ப்பங்கள் அதிகமாகவே இருப்பதாகக் கூறப்படுகின்றது. அத்துடன், பல இணையத்தளங்கள் ஒருவரது தாயின் பெயரை அல்லது கற்ற பாடசாலையின் பெயரை பாதுகாப்புக் கேள்வியாகக் கேட்பதன் மூலம் அங்கத்துவ அங்கீகாரத்தை வழங்குவதற்கான கடவுச் சொல்லை ஏற்படுத்துவதற்காக இத்தகவல்களைப் பயன்படுத்துகின்றன. எனினும், இவையும் ஃபேஸ்புக்கில் போடப்படுவது தவிர்க்கப்படல் வேண்டும்.




அத்துடன்; ஒருவர் வசிக்கின்ற இடம், அவரது பிள்ளைகளின் பெயர்கள், எந்தெந்த நேரங்களில் எங்கெங்கே செல்வது, யார் யாரை சந்திக்கின்றோம் போன்ற விடயங்களை ஃபேஸ்புக்கில் பதிவு செய்வதானது ஒருவர் வீணான சிக்கல்களில் மாட்டிக்கொள்வதற்கு வழி வகுக்கும்.

மேலும், ஃபேஸ்புக்கைப் பலரும் பார்க்கும் வாய்ப்பிருப்பதால், முறையற்ற படங்களை அதில் இடுவது நல்லதல்ல. ஒருவரைப் பற்றிய தவறான எண்ணத்தை ஏற்படுத்திவிட இது காரணமாக அமைந்துவிடும். அது மட்டுமல்லாது, வீட்டின் மாதிரிப் படங்களையும் பெறுமதியான பொருட்களின் படங்கள், முகவரி போன்றவற்றையும் ஃபேஸ்புக்கில் உள்ளீடு செய்வதும் பிரச்சினைகளை ஏற்படுத்திவிடக் கூடியதே. ஒருமுறை ஃபேஸ்புக்கில் உள்ளீடு செய்யப்பட்ட அனைத்துத் தகவல்கள் மற்றும் படங்கள் யாவற்றையும் அழித்துவிட்ட பின்னரும்கூட, மீண்டும் அவற்றை எடுக்கக்கூடிய வாய்ப்புக்கள் அதிகமாக உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அவ்வாறே, Lost my phone அல்லது Need your number போன்ற ஃபேஸ்புக் பக்கங்களைப் பாவிப்பதைத் தவிர்த்துக்கொள்வதும் நல்லதென்று கூறப்படுகின்றது. இதன்போது, ஒருவர் தம்மைப் பற்றிய அனைத்துத் தகவல்களையும் ஃபேஸ்புக்கில் போடுவதன் மூலம் எந்த ஒரு தேடுதல் இயந்திரத்தின் மூலமாகவும் அவர் பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்ள வாய்ப்புக்கள் அதிகமாகவே இருக்கின்றன என்பதால், ஃபேஸ்புக் பாவிக்கின்ற ஒருவர், தனது பெயரை மட்டும் வழங்கிவிட்டு ஏனைய எல்லாவற்றையும் மறைத்து வைத்துக்கொள்வது உசிதமானது என்றும் டேவிட் அறிவுரை வழங்கியுள்ளார்.




எனவே, ஃபேஸ்புக் பாவனையாளர்கள் இவற்றை அனுசரிப்பதன் மூலம் ஃபேஸ்புக் பாவனையினால் ஏற்படும் சிக்கல்களில் மாட்டிக்கொள்ளாமல் தப்பிக்கமுடியும்.




**செம்மைத்துளியான்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைக்கு அந்நியச் செலாவணியை ஈட்டித்தரக்கூடிய பிரதான ஏற்றுமதிப் பயிர்களுக்கு மேலதிகமாக, வருமானத்தைப் பெறக்கூடிய வகையில் பூக்களின் ஏற்றுமதி இருந்து வருகின்றது. இவற்றில் அலங்கார மலர்ச்செய்கையில் அங்கம் வகிக்கும் அந்தூரியம் மலர்ச் செய்கையும் ஒன்று. இலங்கையில் இருந்து உலகின் பல நாடுகளுக்கு அந்தூரியம் மலர்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. ஆகவே, அந்தூரியம் பற்றிய சில தகவல்களை அறிந்துகொள்வோம்

# ஓர் இதழ் பூ:

## அபூர்வமான மலர்

அந்தூரிய மலரின் பிறப்பிடம் தென் அமெரிக்காவாகும். அநேகமாக, உலகம் முழுவதும் 600 வகையான அந்தூரிய மலர்கள் உள்ளன. வீடுகளுக்குள்ளும் வெளியிலும் பூச்சாடியில் வளர்க்கக்கூடிய மலர் வகையாகவும் அந்தூரியம் பிரசித்தம் பெற்று விளங்குகின்றது. மேற்கு நாடுகளில் 'பன்றி வால்' (Pig tail) என்றும் 'லேடி ஜேன்' (Lady jane) என்றும் அந்தூரிய மலர்கள் அழைக்கப்படுகின்றன.

அந்தூரிய மலர்ச் செய்கையைத் தவிர, இலை அந்தூரிய வகைகளும் ஏராளம். இவை பல்வேறு நிறங்களிலும் பல்வேறு தோற்றங்களிலும் காணப்படுகின்றன. அவற்றில், 'அந்தூரியம் க்ரிஸ்டலினம் (*A.crystallinum*) என்ற செடிவகை விலை உயர்ந்ததாகும். இது தவிர, ஒரு மலர்ச் செடியில் இருந்து பெருமளவிலான மலர்களைப் பெற்றுக்கொள்ளவும் அந்த மலர்கள் ஒருமாதகாலம் வரையில் இயற்கைத் தன்மை மாறாமலும் நிறம் மங்காமலும் வாடாமலும் இருக்கக்கூடிய ஓர் அந்தூரிய வகைதான் '*A.andraeanum*'. இந்த வகைக்குரிய மலர்கள் பல வர்ணங்களில் காணப்படுகின்றன. அவை சிவப்பு, செம்மஞ்சள், வெள்ளை, பச்சை, இளஞ்சிவப்பு, ஊதா, பொன் மஞ்சள் ஆகிய வர்ணங்களில் காணலாம். இவற்றில் செம்மஞ்சள் நிற மலருக்கு ஐரோப்பிய நாடுகளில் அதிக கிராக்கி நிலவுகின்றதோடு, ஏனைய வகைகளும் ஏற்றுமதியில் வரவேற்பைப் பெற்றவையாகும்.

## மலர்ச் செடியின் பாகங்கள்




## ஏற்ற சுவாத்தியம்

மத்திய மலைநாடு உட்பட, ஈரவலயத்திற்குட்பட்ட பிரதேசங்களே அந்தூரிய மலர்ச் செய்கைக்கு மிகவும் பொருத்தமானவை. அந்தவகையில்; கண்டி, கம்பஹா, மாத்தளை, காலி, கேகாலை, களுத்துறை, கொழும்பு, இரத்தினபுரி, மாத்தறை ஆகிய மாவட்டங்கள் அந்தூரியம் பயிரிடலுக்கு உகந்த பிரதேசங்களாகும். இதற்கு 16-22$^{0}$c வரையில் உஷ்ணநிலை தேவைப்படுவதோடு, 70%-80% வரையான நிழல் தேவைப்படுகின்றது. 90%-70% வரையான ஈரளிப்பும் தேவை. கூடுதலாக சூரியஒளி கிடைக்கும் பிரதேசங்கள் அந்தூரியம் செய்கைக்குப் பொருத்தமான பகுதிகளாகக் கருத முடியாது.

## பூ பூத்தல்

பொருத்தமான - மிதமான காலநிலை நிலவும் பிரதேசங்களில் வளரும் செடியில் வருடம் முழுவதும் மலர்கள் இருக்கும். ஆனாலும், அதிக மழைவீழ்ச்சி நிலவும் காலங்களில் பூக்கும் வேகம் குறைவாக இருக்கும். பூ உருவாகி அவை போதியளவு வளர்ச்சியடைந்து அழகாக காட்சி தர குறைந்தபட்சம் 5 வாரங்கள் பிடிக்கும். செழிப்பாக வளர்ச்சியடைந்த ஒரு செடியில் இருந்து வருடத்திற்கு 6-8 மலர்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

## பூப் பறித்தல்

பூ நன்கு விரிந்து வளர்ச்சியடைந்து 8-12 நாட்களில் பூவை வெட்டி எடுக்கலாம். வெட்டி எடுக்கப்பட்ட மலர் நான்கு வாரங்களுக்கு அதன் இயற்கைத் தோற்றம் மாறாமல் இருக்கும். ஆனால், முதிர்ச்சியடையாத நிலையில் வெட்டப்பட்ட பூக்கள் விரைவில் வாடி அழகு மங்கிவிடும்.

## பரம்பல்

அந்தூரியம் கன்றுகளை 2 வழிகளில் பெறலாம். அதில் ஒன்று இனச்சேர்க்கை முறை; மற்றையது- இனச்சேர்க்கையற்ற முறை. இனச்சேர்க்கை முறை விதை மூலமும் இனச் சேர்க்கையற்ற முறை கன்றுகளை உருவாக்குவதன் மூலமும் நிகழ்கின்றது.

✱ **மகரந்தச் சேர்க்கையால் பரம்பல்:** அந்தூரிய மலரிதழ் நன்கு விரிந்து 7-10 நாட்களுக்குள் பூவின் சதைமுனைப் பகுதியில் ஒட்டும் தன்மையைக் காணலாம். இதில் மகரந்தமணிகள் தோன்றும். அந்த மகரந்தமணிகளை பற்தூரிகை அல்லது மென்மையான ஏதாவது ஒன்றால் தடவி சேகரித்து மகரந்தமணிகள் இல்லாத சதைக் குறி (சதை முனையில்) தடவி மகரந்தச் சேர்க்கைக்கு வழிவகுக்கலாம். இவ்வாறாக, ஒரு நாளுக்குப் பல தடவைகளாக 4-5 நாட்களுக்கு செய்வதன் மூலம் முதிர்ச்சியடைந்த குறிகளில் இருந்து 6 மாதங்களில் விதைகளைப் பெற்றுக்கொள்ள முடியும். அந்த விதைகளை நாட்டி அதனூடாக,கன்றுகளைப் பெறலாம்.

✱ **வேர்மூலம் கன்றுகளைப் பெறல்:** உகந்த சூழலில் நடப்படுகின்ற தாய்த் தாவரத்தின் அடியில் ஏராளமான வேர்கள் தோன்றும். அந்தத் தாவரத்தில் இருந்து 3-4 அளவு இலைகள் விழுந்த பின்னர் பூக்கள் முறிந்துவிடாதவாறு வேர்களிலிருந்து தோன்றும் கன்றுகளைக் கவனமாகப் பிரித்து நாட்டலாம்.

✱ **தண்டில் இருந்து கன்றுகளைப் பெறல்:** நன்கு முதிர்ச்சியடைந்த அந்தூரியம் செடி நில மட்டத்தில் இருந்து ஒரு அடி அளவு உயரமாக வளரும். அப்போது வேர்ப்பகுதியில் இருந்து அரும்புகள் வெளிப்படும். அந்த அரும்புகள் மூலமும் கன்றுகளைப் பெறலாம்.

## செய்கை முறை

நன்கு நீர் வடிந்தோடக்கூடிய மண்ணில் அந்தூரியம் செழித்து வளரும். அந்தூரியம் செடிகளின் வேர்களுக்கு நன்கு காற்றோட்டம் அவசியமாகின்றது. அதனால், அதற்கு ஏற்ற பயிரிடல் முறை பின்பற்றப்பட வேண்டும். கன்றுகளை சாடிகளில் அல்லது நாற்று மேடையில் நாட்டி பராமரிக்கலாம். சாடியில் பயிரிடும்போது உக்கிய இலை, உலர்த்திய மாட்டெரு, சிறு துண்டுகளாக வெட்டப்பட்ட தென்னம் மட்டைத் துண்டுகள், சிறிதாக நொருக்கப்பட்ட செங்கல் அல்லது ஓட்டுத்துண்டுகள், கரித்துண்டுகள் போன்றவற்றை ஒவ்வொரு அடுக்காக பூச்சாடியில் இட வேண்டும். சாடிக்குள் சிறிய ஓட்டுத்துண்டு அல்லது செங்கற்துண்டுகளை இடுவதால் நீர் வடிதல் மற்றும் வளி உட்செல்லல் நிகழும்.


செங்கல் துண்டுகளை இடுதல்.


இலை குழைகளை இடல்.


கன்று நடுவதற்குரிய அமைப்பு.


உரம் தயாரிப்பதற்குத் தேவையான மணல், செங்கற்துண்டுகள் மற்றும் கரித்துண்டுகள்.


விதைகள் மூலம் கன்றுகளைப் பெற விதைகளுக்கு மேல் ஓட்டுத் துண்டுகளை இடல்.

## உ...

இல...
மலர்களுக்கு...
சிங்கப்பூர், ஹொ...
களில் அதிக கிராக்கி...
அமெரிக்க டொலர் வி...
செய்யப்படுகின்றது. வெள்ளை...
இள மஞ்சள் ஆகிய நிறங்களி...
தப்படுகின்றன. உள்நாட்டிலு...
கிராக்கி நிலவுகின்றது. உள்நா...
7-10 வரையில் விற்பனை செ...

## ஏற்றுமதிக்கு...

அந்தூரிய மலர்களை ஏற்று... செய்வதாயின் அதற்குரிய அ... கப்பட்ட சர்வதேச தராதரம் பே... வேண்டும்.

✱ மலர் இதழின் மேற்பகுதி... திற்கு சமான நிறம் கீழ் பகுதி... இருக்க வேண்டும்.

✱ மலரின் இதழ் நீண்ட இ... அமைப்பில் அல்லது வட்ட ... இருக்க வேண்டும்.

✱ இதழின் மேற்பரப்பு பள... வகையிலும் தடிப்பாகவும் இ...

✱ இதழின் நுனிப்பகுதி கூ... செ.மீ. வரையில் நீளமானதாக...

✱ பூவின் மேல் நோக்கிய ... குட்டையாக, நீளம் குறைவா...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்தூரியம்



## வெளிநாட்டு, உள்நாட்டு மதிப்பு

இலங்கையில் விளையும் அந்தூரிய மலர்களுக்கு ஜப்பான், சவுதி அரேபியா, சிங்கப்பூர், ஹொங்கொங், குவைட் ஆகிய நாடு ல் அதிக கிராக்கி நிலவுகின்றது. ஒரு மலர் 1-1½ க டொலர் விலையில் (ரூபா 100-150) ஏற்றுமதி ின்றது. வெள்ளை, சிவப்பு, பச்சை, இளஞ்சிவப்பு, ஆகிய நிறங்களில் அந்தூரியப் பூக்கள் வகைப்படுத் ன. உள்நாட்டிலும் அந்தூரிய மலர்களுக்கு நல்ல புகின்றது. உள்நாட்டில் ஒரு அந்தூரிய மலர் ரூபா ல் விற்பனை செய்யப்படுகின்றது.

## றுமதிக்குரிய அங்கீகாரம்



மலர்களை ஏற்றுமதி அதற்குரிய அங்கீகரிக் தேச தராதரம் பேணப்பட

தழின் மேற்பகுதி நிறத் நிறம் கீழ் பகுதியில் ாடும்.

இதழ் நீண்ட இருதய அல்லது வட்ட வடிவில் ாடும்.

மேற்பரப்பு பளிச்சிடும் தடிப்பாகவும் இருக்க வேண்டும்.

நுனிப்பகுதி கூர் அமைப்பில் அல்லாமலும் 10-12 பில் நீளமானதாகவும் இருக்க வேண்டும்.


மேல் நோக்கிய சதைக் குறி பூவைவிட சற்றுக் நீளம் குறைவாக இருக்க வேண்டும்.

* குறியின் மேல் நோக்கிய சரிவு 45° அளவில் இருக்க வேண்டும்.
* பூவின் காம்பின் நீளம் 30-50 செ.மீ. வரையில் இருக்க வேண்டும்.
* பூ நோய்த் தொற்றுக்குள்ளாகாமலும் கிருமிநாசினி தெளிக்கப்படாததாகவும் இருக்க வேண்டும். துளைகள் இருக்கக் கூடாது.
* பூவின் காம்பு எடை குறைந்ததாகவும் மெல்லியதாகவும் இருக்க வேண்டும்.

## கிருமி அழிப்பு

அந்தூரிய மலர்ச் செடிகளுக்குப் பாதிப்பு ஏற்படுத்தக்கூடிய பல வகையான கிருமிகள், பூச்சிகள் உள்ளன. கன்றுகளை நாட்டியதிலிருந்து மலர்களை வெட்டும் வரை அவற்றை முறையாகப் பராமரிக்க வேண்டும். கிருமிநாசினி பயன்பாடும் முக்கிய தேவையாக இருக்கின்றது. அந்தூரியம் செடிகளுக்கு கேடு விளைவிக்கக்கூடிய கிருமிகள் மற்றும் பூச்சிகள் சில...

* இலைகளை உண்ணும் கூட்டுப்



கூட்டுப்புழு



நத்தை

புழுக்கள் * நத்தை மற்றும் ஒட்டுண்ணி * மட்டைப் பூச்சி * வெண்மூட்டைப் பூச்சி * கறையான்

## உரமிடல், நீர்ப்பாய்ச்சல்

திரவத்தன்மையிலான உர வகைகளே பொருத்தமானவை. அதனால், காபன் கலந்த திரவ உரவகைகளை பயன்படுத்தலாம். மாதத்திற்கொருமுறை உரமிடுவதன் மூலம் அந்தூரியம் செய்கையை சிறப்பாக மேற்கொள்ளலாம். ஏற்றுமதிக்காகப் பயிரிடப்படும் செடிகளுக்கு ரசாயன சேர்வை கலந்த உரவகை இடப்படுவதுண்டு. அந்தூரியம் கன்றுகளை நட்டு 6-8 மாத காலப் பகுதிக்குள் பொற்றாசியம் அதிகம் உள்ளதும் நைதரசன் குறைந்தளவுள்ளதுமான திரவ உரவகைகளை தெளிப்பதனூடாக, சிறப்பான முறையில் பூ பூப்பதற்கு வழிவகுக்கலாம். இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை இவ்வாறு தெளிப்பது சிறந்த பலனைத் தரும். அந்தூரியம் செய்கைக்கு நீர் இன்றியமையாததாகும். ஆனாலும், அதிக ஈரளிப்பால் செடிகள் அழிந்துபோகும் நிலையும் ஏற்படலாம். பொருத்தமான சூழலில் வேரைச் சுற்றி போதியளவு நீர் பாய்ச்சப்பட வேண்டும். வரண்ட காலப் பகுதியில் செடிகளை நனைத்தல் மற்றும் ஓரளவுக்கு ஈரளிப்பை ஏற்படுத்தும் விதமாக நீர் இடலாம்.

## இலை அந்தூரியம்

அந்தூரிய மலர் வகைகளைப் போன்று இலை அந்தூரியங்களும் உள்ளன. இலைகளின் தோற்றம், அழகு, வடிவமைப்பு, கவர்ச்சி என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டு அவை முக்கியத்துவம் பெறுகின்றன. அவற்றில் சில வருமாறு;

* *A.acaule*
* *A.bakeri*
* *A.warocqueanum*
* *A.pedatoradium*
* *A.crystallinum*
* *A.hookeri*
* *A.regale*
* *A.Macrolobum*
* *A.veitchii*



*A.crystallinum*



*A.acaule*



*A.Macrolobum*



*A.warocqueanum*



*A.regale*



*A.veitchii*

அமீர் ஹுசைன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரியோரின் அனுபவம்



ஒரு மன்னன் விசித்திரமான சட்டம் ஒன்றைப் போட்டான். அதாவது "வேலை செய்ய முடியாத முதியவர்களை தூக்கிச் சென்று மலைப்பகுதியில் விட்டுவிட வேண்டும்" என்பதே அது. இளைஞன் ஒருவன் தன் தந்தையை இவ்வாறு சாகடிக்க விரும்பவில்லை. தந்தையை மலைக்குத் தூக்கிச் செல்வதுபோல் கொண்டு சென்றுவிட்டு மறுபடியும் தனது வீட்டுக்கே கொண்டு வந்து விட்டான். எவருக்கும் தெரியாமல் ரகசியமாக தன் வீட்டில் பாதாள அறை ஒன்றைத் தயார் செய்து அதில் தகப்பனாரைத் தங்க வைத்தான்.

நாட்கள் சென்றுகொண்டிருந்தன, மன்னன் மறுபடியும் இன்னொரு விசித்திரமான ஆணையிட்டான். "ஒவ்வொரு குடிமகனும் சாம்பலால் கயிறொன்றைத் திரித்துக்கொண்டுவர வேண்டும்." என்பதே அது. இளைஞன் மறைத்து வைத்திருந்த தனது வயதான தந்தையிடம் சென்று யோசனை கேட்டான். தந்தையும் "ஒரு கயிற்றை நன்றாக முறுக்கி ஒரு தட்டில் வைத்து எரி. முறுக்குக் கலையாத சாம்பல் கயிறு கிடைக்கும்" என்று யோசனை சொன்னார். அதன்படியே மகன் செய்து அரசரிடம் பரிசும் பாராட்டும் பெற்றான்.

அடுத்து மன்னன் ஒரு மரக்கொம்பைக் கொடுத்து, "இதில் வேர்ப்பாகம் எது? தலைப்பாகம் எது? என்று கண்டுபிடித்து வா" என்றார். இளைஞன் தந்தையிடம் கேட்டான். "மரக்கொம்பைத் தண்ணீரில் போடு எந்தப் பக்கம் தண்ணீரில் லேசாக மூழ்கிறதோ அது வேர்ப்பகுதி, மற்றது தலைப்பகுதி" என்று சொல்லிக் கொடுத்தார். அதையும் மன்னன் முன் செய்து காட்டி பரிசு பெற்றான் அந்த இளைஞன்.

"நாம் அடிக்காமலேயே ஒலிக்கக்கூடிய மேளம் ஒன்று செய்ய முடியுமா?" என்று மன்னன் கேட்டார். வழக்கம்போல மகன் தந்தையிடம் யோசனை கேட்டான். "முதலில் தோல் ஒன்றைத் தயார் செய். பின் மலைக்குச் சென்று ஒரு தேன்கூட்டை எடுத்து வா. தேன்கூட்டை உள்ளே வைத்து மேளம் தயார் செய். உள்ளே இருக்கும் தேனீக்கள் கொட்டக் கொட்ட தானாகவே மேளம் ஒலிக்கும்" என்றார். இளைஞன் அதன்படி செய்து மன்னனிடம் மீண்டும் பாராட்டைப் பெற்றான்.

மன்னனுக்கு ஒரே ஆச்சரியம். "எல்லாவற்றையும் இவ்வளவு புத்திசாலித்தனமாக செய்கிறாயே... எப்படி? என்று கேட்டார். என் தந்தையின் அனுபவ அறிவு" என்று உண்மையைச் சொன்னான் இளைஞன். அப்போதுதான் 'வயதானவர்களின் அனுபவ அறிவை இழக்கக்கூடாது' என்பதை மன்னன் புரிந்துகொண்டான். உடனடியாகவே, முதியவர்களை மலையில் போடும் சட்டத்தை நீக்கினான். ஆகவே,பெரியோரை மதியுங்கள்! போற்றுங்கள்! பெரியவர்களின் அறிவுரைகளைக் கேளுங்கள். அவர்களின் அனுபவ யோசனைகள் நிச்சயம் எமக்கு உதவும்.

R.மீனாதுஷாந்தினி,
தரம்-10A, ப/நிவ்பார்க் த.ம.வித்.,எல்ல.



# வெற்றி நிச்சயம்

நண்பனே - உன்னால் முடியும்
இந்த இளமைப் பருவத்தில்
முயற்சி செய்தால் வாழ்வில்
வெற்றி பெறலாம்.

பள்ளி செல்லும் இப்பருவத்தில்
சுறு சுறுப்புடன் கற்று
நேர்வழிகளில் சென்று
நல்ல பிரஜையாகிடலாம்

முத்தோர் கருத்துகளை மதித்து
சிறியோரிடம் அன்புகாட்டி
ஒற்றுமையாக வாழ்ந்தால்
கிடைக்கும் ஜெயம் ஜெயமே...

வீண் பேச்சுப் பேசாமல்
தன்னம்பிக்கை உடையோராய்
பிறர் மனதைப் புண்படுத்தாது
நன்றியுள்ளோராய் வாழ்ந்தால்
வெற்றி நிச்சயம் நிச்சயமே....

எம்.பாஹிம்,
கா/ஸாஹிரா தே.பா., [illegible]தோட்டை.





# தமிழ் மொழியின் இனிமை

உலகில் உள்ள ஆயிரக்கணக்கான மொழிகளில் தமிழ் மொழிக்கென்று தனியான ஓர் இடமுண்டு. ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு 'பொதிகை' மலையில் தோன்றியதாகக் கருதப்படும் தமிழ் மொழி இன்றளவில் பல்வேறு மூலை முடுக்குகளிலும் பரந்து காணப்படுகின்றது.

யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவதெங்கும் காணோம்" என்று தமிழின் இனிமை மிகவும் அழகாக எடுத்துரைக்கப்படுகின்றது. ஐம்பெருங்காப்பியங்கள், ஐஞ்சிறு காப்பியங்கள், பிற்காலத்தில் தோன்றிய காப்பியங்கள், பல்லாண்டு பழைமை வாய்ந்த நூல்கள் என்பன நம் தமிழன்னையை அழகுபடுத்தும் அணிகலன்களாகும்.

பத்துமாதம் எம்மைக் கருவறையில் பக்குவமாய்ச் சுமந்து பெற்றெடுத்த எமது தாய் கூட எம்மைத் தாலாட்டியதும் உறவாடியதும் தமிழ் மொழியிலேயே ஆகும். எளிமை, இனிமை, தொன்மை படைத்த சிந்தனை கவரும் செம்மொழியாம் தமிழ் மொழியை மென்மேலும் வளர்க்க உறுதி பூணுவோம்!

பாத்திமா தஹ்ரா, தரம்-[illegible]
மாறை/அந்நூர் முஸ்லிம் ம.ம.வித்., வெலி[illegible]

# குவாங்கோ நதி

மாணவர் ஆக்கங்கள்

**சீனா நாகரீகத்திற்கு எடுத்துக்காட்டாக இருப்பது "குவாங்கோ நதி" ஆகும். இந்நதி எவ்வாறு உருவாகியது? என்பதற்கான பதிலாக சீனர்கள் ஒரு கற்பனைக் கதையைக் கூறுகின்றனர். அது என்னவென்று இங்கு பார்ப்போம்.**

சுவர்க்கலோகத்தில் நான்கு ட்ரேகன்கள் உல்லாசமாக வாழ்ந்து வந்தன. இவற்றிற்கு அதிபதியாக இருந்தார் சிங் வய்ங் என்ற அரசர். ஒருநாள் இந்த ட்ரேகன்களுக்கு பூமியைச் சுற்றி வரவேண்டும் என்ற ஆசை ஏற்பட்டது. இதனால், சிங் வய்ங் உறங்கிக் கொண்டிருந்த சமயத்தில் இந்த நான்கு ட்ரேகன்களும் பூமிக்கு வந்தன. அங்கு கண்ட காட்சிகளை இரசித்தன. என்றாலும், மனிதர்கள் மிகவும் கஷ்டத்துடனும், பட்டினியுடனும் வாழ்ந்து வருவதைக் கண்டன. இவர்கள் ஏன் இவ்வாறு வாழ்கின்றனர் என அவை தீவிரமாக சிந்தித்தன. ஒரு ட்ரேகன் மனிதர்களிடம் போய் இதுபற்றிக் கேட்டது. அதற்கு அவர்கள் தமது விவசாயத்திற்கும் கைத்தொழிலுக்கும் நீர் கிடைப்பதில்லை. எங்கும் ஒரே வறட்சி, அதனால்தான் நாம் பட்டினியாகவுள்ளோம் என்றனர். இவர்களின் நிலைமையைக் கண்ட

அந்நான்கு ட்ரேகன்களும் கடல் தெய்வத்திடம் உதவி கோரின. ஆனால், கடல் தெய்வம் உதவி செய்ய மறுத்துவிட்டது. செய்வதறியாது திகைத்த ட்ரேகன்கள் சுவர்க்கலோகத்திலுள்ள நீர்தடாகத்தைப் புரட்டிவிட்டன. அந்நீர் புவியில் வாழும் மக்களுக்கு மழையாகப் பொழிந்தது. இதனைக் கண்ட கடல் தெய்வம் சிங் வய்ங்கிடம் முறையிட்டது, சுவர்க்கலோகத்திலுள்ள புனித நீரை அசுத்தமான மக்களுக்குக் கொடுத்து விட்ட ஆத்திரத்தால் நான்கு ட்ரேகன்களையும் சிங் வய்ங் ஒன்றாக சங்கிலியால் பிணைத்துக் கட்டி அவைகளின் தலையில் பாராங்கற்களை வைத்துவிட்டான். வேதனை தாங்க முடியாத ட்ரேகன்கள் ஆறுபோல் கண்ணீர் வடித்தன. இதனைக் கண்ட மக்கள் மிகவும் கவலையடைந்தனர். ஆனால், ஈவிரக்கமற்ற சிங் வயங் அவைகளை அடித்து அடித்து துன்புறுத்தினான். இவற்றையெல்லாம் கண்ணுற்ற சுவர்க்கலோகத் தேவதை சிங் வய்ங்கை அழித்தாள். அவனின் அழிவின் பின் அந்த நான்கு ட்ரேகன்களும் அழுத வண்ணம் கல்லாக மாறின. அவைகளின் கண்ணீரைத் தான் குவங்கோ நதியென்றும், அதைச் சுற்றியுள்ள மலைகளை நான்கு ட்ரேகன்கள் என்றும் கூறுகின்றனர். அதனால்தான் இன்றும்கூட சீனர்கள் தமது கலாசார நிகழ்வுகளுக்கு ட்ரேகன்களைப் போன்று ஆடையணிந்து நடனமாடுகின்றனர். அவற்றை தெய்வமாகவும் மதிக்கின்றனர்.



ஏ.ஆர்.மஹ்தியா,
தரம்-10A, அல்-ஹிக்மா கல்.,
வெல்லம்பிட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அச்சத்தை ஏற்படுத்தும் 'போபியா'க்கள்!



பயம், பீதி, கிலி, அச்சம், திகில் என்பன ஒரே அர்த்தத்தைத் தரும் தமிழ்ச் சொற்களாகும். இவற்றை உளவியலாளர்கள் போபியாஸ் (Phobias) என அழைக்கின்றனர். சின்னச் சின்ன விடயங்களுக்கும் அச்சமடைகின்ற தன்மை பலருக்கு இருப்பதுண்டு. அச்சமடையவே தேவையில்லாத விடயங்களுக்கும் சிலர் அஞ்சி நடுங்குவதை நாம் அன்றாடம் பார்க்கக்கூடியதாக இருக்கின்றது. பூச்சி, புழுக்களைக் கண்டு அச்சப்படுபவர்களும், இருளைக் கண்டு அச்சப்படுபவர்களும், பாம்பு, நாய் போன்றவற்றைக் கண்டு அச்சப்படுபவர்களும், ஆழத்தையோ, உயரத்தையோ கண்டு அச்சப்படுபவர்களும் நம்மில் பலர் உள்ளனர்.

ஆண்களை விட, பெண்களே இவ்வாறு அதிகமாகப் அச்சமடைகின்றனர். பெண்களின் உடம்பில் டெஸ்டோஸ்டெரோன் (Testosterone) எனப்படும் ஓமோன் ஆண்களை விடவும் குறைந்த அளவில் காணப்படுவதே இதற்குரிய காரணமாக இருக்கலாம் என்று உளவியலாளர்கள் கருதுகின்றனர். தவிர ஆண்களில் தங்கி பெண்கள் வாழப் பழகியிருப்பதும், ஆண்களைப் பெண்கள் பாதுகாப்பாளர்களாகக் கருதியிருப்பதும் கூட பெண்களது அபரிதமான அச்சப்படும் தன்மைக்குக் காரணமாக இருக்கலாமெனவும் நம்பப்படுகின்றது.

விலங்குகள், இரத்தம், நீர், பாலங்கள், குகைகள், நெருப்பு, இருள் போன்ற எதுவும் மனிதனிடத்தில் 'போபியா'வை ஏற்படுத்தலாம். திறந்தவெளிகளைக் கண்டு நடுங்குபவர்களும் உள்ளனர். இது Agoraphobia என்றழைக்கப்படுகின்றது. திறந்தவெளிப் பீதியினால் பாதிக்கப்பட்டுள்ளோர் ஆள் நடமாட்டமில்லாத திறந்தவெளியைக் கண்டதும் திகிலடைந்து, பாதுகாப்பான இடத்தையோ, மனிதரையோ தேடி ஓடுவதை நாம் காணலாம்.

இவ்வாறான 'போபியா' ஏற்படுவதற்கு மனிதனிடத்தில் ஏற்படும் உயிரியல் மாற்றங்களே காரணமென்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

இயல்பாகவே ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய விடயங்கள் அல்லாமல், அச்சப்படவே தேவையில்லாத விடயங்களுக்கும் அச்சப்படுவதை 'போபியா' என்பர்.

ஆரம்பத்தில் இவ்வாறான அச்சத்தினால் திகிலடைந்த ஒருவர், மறுபடியும் அவ்வாறான விடயங்களைத் தவிர்த்துக் கொள்வதில் கண்ணுங்கருத்துமாகி இருப்பதை நாம் அவதானித்திருப்போம். பாம்பைக் கண்டு அச்சமடைந்த ஒருவர், படத்தில் கூட பாம்பைப் பார்ப்பதைத் தவிர்த்துக் கொள்வார். நாயைக் கண்டு அச்சமடைந்தவர், நாய் வளர்க்கப்படும் வீடுகளுக்குப் போவதையே தவிர்த்துக்கொள்ள முற்படுவார். இருட்டுக்கு அச்சமடைந்த ஒருவர் தனியாக இருட்டில் நடக்க அச்சப்படுவார். சிலர் இருட்டில் நடக்க நேர்ந்தால் எதையாவது உளறிக்கொண்டோ, பாடிக்கொண்டோ செல்வதையும் கண்டுள்ளோம்.

உயரமான இடங்களைக் கண்டு அச்சப்படுவது (Acrophobia), விமானத்தில் பறக்க அச்சப்படுவது (Aerophobia), திறந்தவெளியில் நடமாட அச்சப்படுவது (Agoraphobia), வாகனம் செலுத்த அச்சப்படுவது (Amaxo phobia), மனிதர்களைக் கண்டு அச்சப்படுவது (Acro phobia) நீரைக் கண்டு அச்சப்படுவது (Aquaphobia), இருளைக் கண்டு அச்சப்படுவது (Nyctophobia), சனநெருக்கடியைக் கண்டு அச்சப்படுவது (Ochlophobia), பாம்பைக் கண்டு அச்சப்படுவது (Opidiophobia), உரக்கப் பேசுவதைப் பார்த்து அச்சப்படுவது (Phonophobia), தீயைக் கண்டு அச்சப்படுவது (Pyrophobia), மரணத்தைக் கண்டு அச்சப்படுவது (Thanatophobia), தலைமயிரைக் கண்டு அச்சப்படுவது(Trichophobia), அந்நியர்களைக் கண்டு அச்சப்படுவது (Xenophobia) என 'போபியா'க்கள் பல பொதுவாகக் காணப்படுகின்றன.



இவ்வாறான அர்த்தமற்ற அச்சங்களினால், அளவுக்கதிகமாக ஒருவர் பாதிப்புறும் பட்சத்தில் உளநோய் மருத்துவரை நாடி, ஆலோசனை பெறுவதானது, அச்சம் மிதமிஞ்சிப் போய் தீவிரமடைவதைத் தவிர்க்க உதவும்.

**ஐ.ஏ.ஸத்தார்**

## சாதனையாளர் தேல்ஸ் (கி.மு.625-கி.மு.546) மின்சக்தி



இன்றைய உலகில் மின்சக்தியானது மிக இன்றியமையாததாக மாறிவிட்டது. மின்சக்தியைக் கண்டுபிடிப்பதற்கு முன்னோடியாகத் திகழ்ந்தவர் தேல்ஸ் எனும் தத்துவஞானி என்றால் அது மிகையாகாது.

சுமார் 2500 ஆண்டுகளுக்கு முன்பே கிரேக்க நாட்டின் மிலிட்ஸ் என்ற ஊரில் பிறந்த தேல்ஸ் கணிதம், வானியல் போன்ற துறைகளில் சிறந்த சிந்தனையாளர். விஞ்ஞான ஆய்வுகளில் ஈடுபடுவதே அவரின் பொழுது போக்காக இருந்தது.

ஒருநாள் அவர் ஆய்வில் ஈடுபட்டிருந்தபோது, அவருடைய மேசையின்மேல் இருந்த அம்பர்-1 எனும் கல் அவர் பார்வையில் பட்டது. அக்கல்லின் மீது தூசி படிந்திருக்கவே, ஒரு கம்பளத்தால் அதனைத் துடைத்தார். கல்லின் அழகை சிறிது நேரம் இரசித்துவிட்டு மீண்டும் அதை மேசையின்மீது வைத்துவிட்டார். இத்தகைய 'அம்பர்' கல்லைத் துடைத்து மேசைமீது வைத்ததுதான் தாமதம் பளபளப்பாக இருந்த அம்பர் கல், தூசிகளை மீண்டும் ஈர்த்துதூசி படிந்ததைப் போல் காட்சி அளித்தது.

இந்த நிகழ்வை தேல்ஸ் ஆய்வு செய்ய முற்பட்டார். கம்பளத்தால் தேய்த்துத் துடைத்தவுடன் மீண்டும் தூசிகளை இழுத்துக் கொள்வது ஏன்? என்று தீவிரமாகச் சிந்தித்தார். அப்பொழுது கிரேக்க நாட்டில் மாக்னீசியா எனும் ஊரில் கண்டுபிடிக்கப்பட்ட காந்தப் பாறைபற்றிக் கவனம் செலுத்தப்பட்டது. முதன்முதலில் இந்த இயற்கை காந்தக்கல், மாக்னீசியா எனும் ஊரில் கண்டுபிடிக்கப்பட்டதால் அக்கல்லுக்கு மாக்னடைட்' என பெயர் சூட்டப்பட்டு பின்னர் மருவி 'மாக்னெட்' என அழைக்கப்பட்டு வருகிறது. காந்தப்பாறையில் இரும்பு ஒட்டிக்கொள்வதற்கும் அம்பர் கல்லைத் தேய்க்கும் போது வெளிவரும் அபூர்வ சக்திக்கும் தொடர்பு இருக்கிறதா? என தேல்ஸ் தீவிரமாக ஆராய்ந்தார். மாக்னெட் கல்லுக்கு இரும்பை இழுக்கும் சக்தி இருப்பதையும் அம்பர் கல்லுக்கு இலேசான பொருட்களை இழுக்கும் சக்தி மாத்திரம் இருப்பதையும் இரும்பை இழுக்கும் சக்தி இல்லை என்பதனையும் கண்டறிந்தார். இவ்விரு சக்திகளும் யாவை? எவ்வாறு உண்டாகின்றன? என அவர் கண்டுபிடிக்காவிட்டாலும் மின்சக்திக் கண்டுபிடிப்பிற்கு முதல் அத்திவாரம் இட்டவர் தேல்ஸ் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

(அ)

## விஜய் மாணவர் கழகம்



அங்.இல: 4029

ல.வவிந்தன், தரம்-7B, யா/ஹாட்லி.கல்.,



அங்.இல: 4030

அஷ்ரப்.ருஸ்தி அஹமட், தரம்-01, கஹட்டகஸ்திகிலிய மு.வித்., அனுராதபுரம்.



அங்.இல: 4031

மு.றமு.றிப்கான், தரம்-1A, அல்மிஸ்ப.வித்., கல்முனை-13.



அங்.இல: 4032

ரிபாக்.அஹ்மட், தரம்-05, ஸலாகிய சர்வதேச பா., வெலிகம.



அங்.இல: 4033

எஃப்.எம்.சதாம், தரம்-05, க/மீரா.மத்.கல்., கட்டுகஸ்தோட்டை.



அங்.இல: 4034

தி.மித்திரன், தரம்-7A, யா/வி.கல்., யாழ்ப்பாணம்.



அங்.இல: 4035

இ.கேதுஜன், தரம்-9A, வ/தமிழ்.ம.ம.வித்., வவுனியா.



அங்.இல: 4036

ச.கீர்த்தனா, தரம்-11, கிளி/இராமநாதபுரம் மேற்.அ.த.க.பா., வட்டக்கச்சி.



அங்.இல: 4037

எம்.எச்.ஏ.ஷல்கி, தரம்-8A, அல்.மிஸ்பாஹ் ம.வித்., கல்முனைக்குடி-13.



அங்.இல: 4038

த.சனோஜிதன், தரம்-8A, தம்பிலுவில் ம.ம.வித்., அம்பாறை.



அங்.இல: 4039

எம்.ஜெயகலா, தரம்-11B, கிரேக் த.ம.வித்., பண்டாரவளை.



அங்.இல: 4040

கே.சிந்துஜா, தரம்-13B, தி/ஹி.சண்முக இ.ம.கல்., திருகோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வியாங்கல்லையைச் சேர்ந்த நிஸாம்-நஸ்ரியா தம்பதியரின் செல்வப் புதல்வன் எம்.நுஸைர், 10.03.2011 அன்று தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாட வுள்ளார். இவரைக் குடும்பத்தி னர் மற்றும் உறவினர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருளால் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.

*(தகவல்: அகிலா அஷ்ரப்)*




தெமட்டகொடை- ஆறாமய வீதியைச் சேர்ந்த லிண்டன்-வினித்தா தம்பதியரின் செல்வப் புதல்வி இமேஷா, 07.03.2011 அன்று தனது நான்காவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரைக் குடும்பத்தினர் உட்பட, உறவினர்கள் அனைவரும் பல்கலையும் கற்று, நலமுடன் வாழ வாழ்த்துகின்றனர்.



கிறேண்ட்பாஸைச் சேர்ந்த செல்வகுமார்-ரோஸ்லின் தம்பதியரின் செல்வப் புதல்வன் டிக்ஷன், 11.03.2011 அன்று தனது ஐந்தாவது பிறந்தநாளைக் கொண்டாடவுள்ளார். இவரைக் குடும்பத்தினர் அனைவரும் அன்னை வேளாங்கனி மாதா அருளில் வாழ வாழ்த்துகின்றனர்.





அலவத்துகொடையைச் சேர்ந்த அப்துர் ரஸாக்-நிஹாரா தம்பதியரின் செல்வப் புதல்வி பாத்திமா அம்னா, 04.03.2011 அன்று தனது நான்காவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரைப் பெற்றோர் மற்றும் உறவினர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருளால் சகல சௌபாக்கியங் களும் பெற்று சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.





கடந்த ஆண்டிற்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் விழா, அண்மையில் கல்முனை அல்-பஹ்ரியா மகா வித்தியாலயத்தின் ஆராதனை மண்டபத்தில் நடைபெற்றது. இவ்விழாவின்போது, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் அம்பாறை மாவட்டத் தில் இரண்டாம் இடத்தைப் பெற்று சித்தியடைந்த அல்-ஹிலால் வித்தியாலய மாணவன் முஹம்மட் ஹய்சானிற்கு விழாவின் பிரதம அதிதியும் கிழக்கு மாகாண சபை உறுப்பினருமான கே.எம்.அப்துல் ரஸ்ஸாக், நினைவுச்சின்னம் மற்றும் பரிசில்கள் வழங்கிக் கௌரவிப்பதைப் படத்தில் காணலாம்.

*(தகவல்: நிப்றாஸ் மன்சூர்-கல்முனை)*




**நாம் இதுவரை ஓவியம் ஒன்றை எவ்வாறு வரையலாம் என்பதை சிறு பகுதிகளாகப் பார்த்தோம். பல்வேறு வகையான ரேகைகள் மூலம் பறவைகள், மிருகங்கள், மனித உருவங்கள் மற்றும் அவற்றின் செயற்பாடுகள் உட்பட, பல்வேறு அம்சங்களை வரைந்து பழகினோம்.**

இந்த இலகுவான பயிற்சிகளை நீங்கள் செய்து பயிற்சி பெற்றிருந் தால் நிச்சயமாக உங்கள் கற்பனையில் இன்னும் பல கற்பனை உத்திகளைப் பெற்றிருப்பீர்கள். அத்துடன், உங்க ளாலும் ஓவியம் வரைய முடியும் என்ற நம்பிக்கையைப் பெற்றிருப் பீர்கள். ஏனைய பாடங்களைப் பயிற்சிகளில் ரேகைகளை சுதந்திரமாகக் கையாண்டு உரிய இடத்தில் தேவைக்கேற்ப வரையும் ஆற்றல் முக்கியமானது. அந்தவகையில், பொருட்கூட்டங்களை வரையும்போது, நாம் கடைப்பிடிக்க வேண்டிய பிரதான அம்சங்களை முதலில் நோக்குவோம்.




போன்று ஓவியப் பாடத்தைப் படித் தால் மட்டும் போதாது. வரையும் பயிற்சிகளிலும் ஈடுபட வேண்டும். ஆரம்பத்தில் இது சலிப்பை ஏற்படுத் தினாலும் மீண்டும் மீண்டும் பயிற்சி களை செய்யும்போது, அது தானா கவே பழக்கப்பட்டுவிடும்.

எனவே, இனிவரும் பாடங்களில் நாம் ஏற்கனவே பெற்ற பயிற்சிகளை சிறப்பாகச் செய்வதற்குத் தேவை யான மேலதிக அம்சங்களை ஒவ்வொன்றாக நோக்குவோம்.

**பொருட்கூட்டங்களை வரையும்போது பேணப்பட வேண்டிய அம்சங்கள்:**

நாம் ஏற்கனவே பெற்ற

✱ எமது கண்ணுக்குத் தெரியும் பொருட்கூட்டம் (தொகை), எமது கண்ணுக்கு நேராகவா அல்லது கீழாகவா அல்லது மேலாகவா இருக்கின்றது என்பதை சரியாகத் தெரிவு செய்துகொள்ள வேண்டும். இதுவே 'கண் மட்டம்' எனப்படுகின்றது.

✱ அடுத்து பொருளின் பரிமாணம் முக்கியம் பெறுகின்றது. முப்பரிமாணம் என்றால்; நீளம், அகலம், உயரம் எனும் அளவீடுகளைக் கொண்டது. இருபரிமாணம் என்றால்; நீளம் அகலம் ஆகிய அளவுகளைக் கொண்டது.

(தொடரும்)



சு.கிருஷன், தரம்-$4^{A}$,
புதுக்குளம் ம.வி., புதுக்குளம்.



மு.யதுர்ஷன், தரம்-$7^{A}$,
சாவகச்சேரி இ.கல்., சாவகச்சேரி.



அனுப்ப வேண்டிய முகவரி:
கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு




இன்சாப் ரிஸ்வி, தரம்-5,
அசோக ம.வித்., கண்டி.




எம்.மில்ஹான்,
தரம்-12$^{(கலை)}$,
அல்-பஹ்ரியா மத்.கல்.,
பாணந்துறை.




ந.கீர்த்தனா, தரம்-11,
இந்துக் கல்., கிளிநொச்சி.



எம்.நுஸ்லி, தரம்-4,
பறகஹதெனிய தே.பா.,
பறகஹதெனிய.



அ.சோபிகன்,
தரம்-$9^{C}$,
சாவகச்சேரி இ.கல்.,
சாவகச்சேரி.



எம்.உஸ்மான், தரம்-$1^{PG}$,
இக்ரா சர்வதேச பாட.,
புத்தளம்.



எம்.பஸீல், தரம்-$8^{C}$,
கெகுணகொல்ல தே.பா.,
கெகுணகொல்ல.



எம்.நிஹ்லா, தரம்-8,
கா/அபா மு.ம.வித்., ஹந்தஸ்ஸ.



ம.நிதர்சன்,
தரம்-$8^{A}$,
கொக்குவில் இந்துக் கல்.,
கொக்குவில்.



றிஸ்வானுல் ஜென்னா,
தரம்-9,
அப்துல் மஜீது வித்.,
திருகோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேப்பமரத்தடிப் பேய் 'முகமூடி கழன்றது'




அரியாலையூர் சி.சிவதாசன்

அந்த உருவம் அப்படியே அதிர்ந்து போய் நின்றது. கிராமத்துக்கு சென்ற வித்தியாபரன் மக்களை எழுப்பி அவர்களிடம் விஷயத்தைக் கூறினான். அப்போதுதான் அந்த வெடிச்சத்தம் வித்தியாபரனுக்குக் கேட்டது. எனினும், அவன் அச்சமடையவில்லை. அது திருக்குமாரின் வேலையாகத்தான் இருக்குமென நினைத்தான். அவன் தீர்த்த முதல் துப்பாக்கி வேட்டும், இப்போது தீர்த்த துப்பாக்கி வேட்டும் கிராமத்தவர்களை அச்சத்தில் உறைய வைத்தது.

வித்தியாபரனின் அழைப்புக்கு ஏற்ப கிராம மக்கள் மிகுந்த அச்சத்தின் மத்தியில் வித்தியாபரனோடு வேப்பமரத் தடிக்குப் புறப்பட்டனர். அவர்கள் பொல்லுகள், கத்திகள் லாம்புகளை எடுத்தபடி, மிக விரைவாக நடந்தார்கள். வேப்பமரத் தடியை அடைந்ததும் அங்கே எதற்கும் அஞ்சாது நிற்கும் திருக்குமாரையும், கட்டுண்டு கிடக்கும் வேப்பமரத்துப் பேயையும் கண்டார்கள். இதுதான் பேயா? அந்தப் பேயின் முகமூடியை அகற்றுங்கள் உண்மை புரிந்துவிடும்'' என அங்கு நின்றவர்கள் கூறினார்கள். அங்கு நின்ற ஒருவன் பேயின் அருகே சென்று துணியை விலக்க முற்பட்டான். பேயின் திமிறலால் அவனால் அருகில் செல்ல முடியவில்லை.இதனால், கோபமடைந்த திருக்குமார் துப்பாக்கியால் பேயை நோக்கிக் குறி வைத்தான். அத்துடன், பேய் அமைதியானது. முனகல் சத்தம் மட்டும் கேட்டது. வித்தியாபரன் இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திப் பேயின் அருகே சென்றான். பேயின்மீது கைவைத்து பற்றிப்பிடித்து இழுத்தான். அவன் கையுடன் துணியொன்று வந்தது. அது முகத்தை மறைக்கும் முகமூடி. அப்பொழுது அங்கு நின்ற ஒருவன் பேயை நோக்கி டோர்ச் வெளிச்சத்தைப் பாய்ச்சினான். அங்கே! அவர்கள் கண்ட காட்சி அனைவரையும் மெய் சிலிர்க்க வைத்தது. அவன்...... அந்த முகத்துக்குரியவன் இதுவரை கிராமத்து மக்களால் இறந்து போனவன் எனக் கருதப்பட்ட சங்கிலிக் கறுப்பன்தான். ''சங்கிலிக் கறுப்பன்! சங்கிலிக் கறுப்பன்!'' எல்லோர் வாய்களிலும் அதே வார்த்தை.

''இதுவரை பேய்! பேய்! என அஞ்சியது இவனைக் கண்டுதானா? விடாதீர்கள் இவனைக் கொல்லுங்கள். அடியுங்கள்'' எனக் கிராமத்து மக்கள் ஆக்ரோஷத்துடன் கோஷங்களை எழுப்பினர்.

சிலர் கோப மிகுதியால் முன்னால் வந்து சங்கிலிக் கறுப்பனைத் தாக்க முற்பட்டார்கள். திருக்குமாரும், வித்தியாபரனும் அவர்களைத் தடுத்து 'அவனை ஒன்றும் செய்யாதீர்கள். காயப்பட்டு அவன் கைகளிலிருந்து இரத்தம் வடிந்துகொண்டிருக்கிறது. அவன் கட்டுகளை அவிழ்த்து அவன் காயத்திற்கு மருந்திட வேண்டும். அவன் எதற்காக இதனைச் செய்தான் என்பதையும் அறிய வேண்டும்'' எனக் கூறினார்கள்.

வித்தியாபரன் கிராமத் தலைவரின் மகன் என்பதால்! அவன் வார்த்தைக்குக் கிராமத்து மக்கள் கட்டுப்பட்டார்கள். அவனின் கட்டுகள் அவிழ்க்கப்பட்டன. அப்பொழுது அவன் திமிறிக்கொண்டு ஓட எத்தனித்தான். அவனை சிலர் மடக்கிப் பிடித்தனர். எதுவும் செய்ய முடியாத நிலையில் சங்கிலிக் கறுப்பன் அடங்கிப் போனான். அவன் கையில் ஏற்பட்ட காயத்தை துணியொன்றினால் கட்டி அதிலிருந்து வடிந்த இரத்தத்தைக் கட்டுப்படுத்தினான் திருக்குமார். அவன் இவ்வாறு செய்தது அங்கு நின்றவர்கள் சிலருக்குப் பிடிக்கவில்லை.

இதை உணர்ந்த வித்தியாபரன், ''மனித நேயத்தை நாம் மறந்துவிடலாகாது. இப்பொழுது சங்கிலிக் கறுப்பனை எங்கள் வீட்டிற்குக் கூட்டி வாருங்கள்'' எனக் கூறினான். அவன் கூறியதை அங்கு நின்றவர்கள் சிறிது சிந்தனையின் பின் ஏற்றுக் கொண்டனர்.

சங்கிலிக் கறுப்பன் மாணிக்கம்பிள்ளையின் வீட்டிற்குக் கொண்டு வரப்பட்டான். கிராமத்திலிருக்கும் வைத்தியர் இரவு என்றும் பாராது அங்கு அழைத்து வரப்பட்டார். அவனது காயத்தைப் பார்வையிட்ட வைத்தியர் அதற்குரிய மருந்திட்டார். சங்கிலிக் கறுப்பன் தப்பிக்கக் கூடாது என்பதில் அக்கறை கொண்ட சிலர் மாணிக்கம்பிள்ளையின் வீட்டிலேயே அன்று இரவைக் கழித்தனர்.

வித்தியாபரனும், திருக்குமாரும் சங்கிலிக் கறுப்பனோடு பேச முனைந்தனர். கதையோடு கதையாக ''ஏன் இப்படிப் பேயாக மாறினாய்'' எனத் திருக்குமார் கேட்டான். சங்கிலிக் கறுப்பன், விரக்தியுடன் சிரித்தான்.

''நான் திருடன்தான். திருடுவது என்தொழில். உங்களின் இந்த வீட்டிற்குக் கூடத் திருடவந்தேன். உங்கள் வீட்டு வேலைக்காரன் என் தலையில் பலமாக அடித்தான் அதனால், நான் மயங்கிப் போனேன். இரவோடு இரவாக என்னைத் தூக்கிச் சென்றார்கள். என்னைத் தூக்கிச் சென்றவர்கள் கிராமத்தின் எல்லையில் என்னைப் போட்டுவிட்டு சென்றுவிட்டார்கள். குற்றுயிராய்க் கிடந்த எனக்கு இயற்கை உதவியது. அப்போது நல்ல மழை பெய்தது மழையில் நனைந்தேன். தாகமாக இருந்தது மழை நீரைப் பருகினேன். களைப்பு நீங்கியது. எனது சரத்தின் ஒரு பகுதியைக் கிழித்து தலைக்குக் கட்டுப் போட்டேன். மெல்ல எழுந்து வீடு சென்றேன். அதன் பின் நடந்தவற்றைக் கூறவேண்டிய அவசியம் இல்லை. நான் ஒரு முடிவுக்கு வந்தேன். என்னை ஒழித்துக்கட்டுவதே நோக்கமாக இருந்த இந்தக் கிராமத் தலைவருக்கும், என்னைக் காப்பாற்ற நினைக்காத இக் கிராமத்தவர்களுக்கும் தகுந்த பாடம் புகட்ட வேண்டும் என்ற முடிவுக்கு வந்தேன். அதன் விளைவுதான் இந்தப் பேய் வேடம்'' எனக் கூறி முடித்தான்.

நகருக்குச் சென்ற மாணிக்கம்பிள்ளை வீடு நோக்கி வந்துகொண்டிருந்தார். வழியில் இரவு நடந்தவற்றை அவரிடம் சிலர் கூறினர். வீட்டுக்கு வந்தவர் சங்கிலிக் கறுப்பனைப் பார்த்து மிகுந்த வியப்படைந்தார். சட்டத்தில் இருந்து யாரும் தப்பிக்கக் கூடாது என்ற நோக்கில் அவர் தன் ஆட்கள் மூலம் நகரப் பொலிஸாருக்குத் தகவல் அனுப்பினார். விரைந்து வந்த பொலிஸார் சங்கிலிக் கறுப்பனைக் கைது செய்தனர். இளைஞர்களான திருக்குமாரையும், வித்தியாபரனையும் கிராமமக்கள் மனதாரப் பாராட்டினர். தமக்கு ஏற்பட்ட இன்னல்கள் நீங்கியதை எண்ணி அந்த மக்கள் அக மகிழ்ந்தனர். (முற்றும்)

**''இதுவரை பேய்! பேய்! என அஞ்சியது இவனைக் கண்டுதானா? விடாதீர்கள் இவனைக் கொல்லுங்கள். அடியுங்கள்'' எனக் கிராமத்து மக்கள் ஆக்ரோஷத்துடன் கோஷங்களை எழுப்பினர்**



# படிப்பும் விளையாட்டும்



ஐந்தாம் வகுப்பில் படிக்கும் கணேசனுக்கு எப்போதுமே விளையாட்டுத்தான். பாதி நாட்கள் பாடசாலைக்குப் போகாமல் விளையாடிக்கொண்டே இருப்பான். அவனுடைய அம்மா பூரணிக்கு அவனோடு சண்டை போடவே நேரம் சரியாக இருக்கும்.

பாடசாலைக்குப் போகச்சொல்லி அறிவுறுத்தினால் ஒருநாள் செல்வான். மறுநாள் பாடசாலைக்குச் செல்வது போல் பையைத் தூக்கிக்கொண்டு போவான். ஆனால், பாடசாலைக்குச் செல்லாமல் விளையாடிவிட்டு, பாடசாலை முடியும் நேரத்திற்கு வீட்டிற்கு வருவான். பூரணிக்கு இது மிகவும் கவலையாக இருந்தது. ஒருநாள் ''அம்மா, இந்த சீனிப் போத்தலில் நிறைய எறும்புகள் செத்துக்கிடக்குதம்மா?'' என்று கூறினான் கணேசன்.

அப்போது அவனின் தாய் பூரணி ''கணேசா, எறும்புக்கு என்ன பிடிக்கும்?'' என்று கேட்டார்.

''இதென்னம்மா கேள்வி? சீனி தான் ரொம்பப் பிடிக்கும்'' என்றான் கணேசன்.

''எறும்புக்கு சீனி ரொம்பப் பிடிக்கும்தான். அதனால், அதுக்குள்ளேயே கிடந்து வெளியே வரமுடியாமல் செத்துப்போச்சுப் பார்த்தியா? அளவோடு சாப்பிட்டுட்டு வெளியே வந்து தனது வேலையைப் பார்த்திருந்தால் இப்படி ஆகியிருக்குமா? நீயும் இப்படித்தான் கணேசா! விளையாட்டுத்தான் பிடிக்கும் என்று ரொம்ப விளையாடிக் கொண்டே இருந்தால் படிப்பே மறந்துபோகும், அப்புறம் வாழ்க்கையே வீணாகப் போய்விடும். விளையாட்டும் வேணும், படிப்பும் வேணும். புரிஞ்சுதா?'' என்றார் பூரணி.

''நல்லாப் புரிஞ்சுதம்மா, இனிமேல் நல்லாப் படிக்கிறேன்'' என்றான் கணேசன் திருந்தியவனாக.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




## ආයුබෝවන්
## ஆயுபோவன்
## வணக்கம்

**இன்றைய பாடத்தில் நாம் 'யானை'பற்றிய ஒரு சிறு கட்டுரையைப் பார்ப்போம்**

### ඇතා

1. ඇතා ලොකු සතෙකි.
2. ඇතා කැලයේ වාසය කරයි.
3. ඇතාට දිග හොඬවැලක් ඇත.
4. ඇතා එයින් කොළ අතු කඩාගෙන කයි.
5. ඇතාගේ කකුල් විශාලය.
6. ඇතාගේ ඇස් කුඩාය.
7. ඇතාගේ කන් කුළු වාගේය.

### எதா

1. எதா லொகு சதெகி.
2. எதா கெலயே வாசய கறய்.
3. எதாட திக ஹொன்டவெலக் எத.
4. எதா எயின் கொள அ(த்)து கடாகென கய்.
5. எதாகே ககுல் விஷாலய.
6. எதாகே எஸ் குடாய.
7. எதாகே கன் குளு வாகேய.

### யானை

1. யானை பெரிய ஒரு மிருகம்.
2. யானை காட்டில் வசிக்கும்.
3. யானைக்கு நீண்ட தும்பிக்கை உண்டு.
4. யானை அதனால் இலைகளைப் பறித்து உண்ணும்.
5. யானையின் கால்கள் பெரியவை.
6. யானையின் கண்கள் சிறியவை.
7. யானையின் காதுகள் சுளகு போன்று இருக்கும்.

### பயிற்சி

**பின்வரும் வாக்கியங்களைச் சிங்களத்தில் மொழிபெயர்க்க.**

i. யானை பெரிய மிருகம்.
.................................................................

ii. யானைக்கு ஒரு தும்பிக்கை உண்டு.
.................................................................

iii. யானையின் கண்கள் சிறியவை.
.................................................................

iv. யானை காட்டில் வசிக்கும்.
.................................................................

v. யானையின் கால்கள் பெரியவை.
.................................................................



**இடைவெளிகளை நிரப்புக**

1. ඇතා .................................................... වාසය කරයි.
2. ඇතාට දිග .................................................... ඇත.
3. .................................................... කකුල් විශාලය.
4. ඇතාගේ කන්.................................................... වාගේය.




✱ இறந்தகால தனி வாக்கியங்களுக்குரிய (Past Simple Tense) செய்வினை (Active Voice) வாக்கியங்களையும் அவற்றுக்குரிய செயற்பாட்டு வினை (Passive Voice) வாக்கியங்களையும் மேலும் உதாரணங்களுடன் இங்கே ஒப்பிட்டுப் பயில்வோம்.

(அ) நான் அந்தப் பொதிகளைக் காவிச் சென்றேன்.
I carried those parcels.
(இறந்தகால தனி வாக்கியம்- செய்வினை)
(Active Voice of the Past Simple Tense)

(ஆ) அந்தப் பொதிகள் என்னால் காவிச் செல்லப்பட்டன.
Those parcels were carried by me.
(இறந்தகால தனி வாக்கியம்-செயற்பாட்டு வினை)
(Passive Voice of the Past Simple Tense)

(இ) ஆனந்தா இந்தப் படங்களை வரைந்தான்.
Ananda drew these pictures.
(இறந்தகால தனி வாக்கியம்- செய்வினை)
(Active Voice of the Past Simple Tense)

(ஈ) இந்தப் படங்கள் ஆனந்தாவால் வரையப்பட்டவை.
These pictures were drawn by Ananda.
(இறந்தகால தனி வாக்கியம்-செயற்பாட்டு வினை)
(Passive Voice of the Past Simple Tense)

(உ) நீ அந்த யன்னல்களுக்கு நிறம் தீட்டினாய்.
You painted the windows.
(இறந்தகால தனி வாக்கியம்-செய்வினை)
(Active Voice of the Past Simple Tense)

(ஊ) அந்த ஜன்னல்கள் உன்னால் நிறம் தீட்டப்பட்டவை.
The windows were painted by you.
(இறந்தகால தனி வாக்கியம்-செயற்பாட்டு வினை)
(Passive Voice of the Past Simple Tense)

(எ) லலிதா அந்தப் பத்திரங்களை விநியோகித்தாள்.
Lalitha issued the forms.
(இறந்தகால தனி வாக்கியம்- செய்வினை)
(Active Voice of the Past Simple Tense)

(ஏ) அந்தப் பத்திரங்கள் லலிதாவால் விநியோகிக்கப்பட்டன.
The forms were issued by lalitha.
(இறந்தகால தனி வாக்கியம்-செயற்பாட்டு வினை)
(Passive Voice of the Past Simple Tense)

(ஐ) அந்த நாய் எலிகளைக் கொன்றது.
The dog killed the rats.
(இறந்தகால தனி வாக்கியம்- செய்வினை)
(Active Voice of the Past Simple Tense)

(ஒ) அந்த எலிகள் நாயால் கொல்லப்பட்டன.
The rats were killed by the dog.
(இறந்தகால தனி வாக்கியம்- செயற்பாட்டு வினை)
(Passive Voice of the Past Simple Tense)

**குறிப்பு:** ✱ were issued - **விநியோகிக்கப்பட்டன.**
✱ were killed - **கொல்லப்பட்டன.**

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடாபிக்கு எதிராக ஐ.நா.வின் தடை...!

மக்களின் எதிர்ப்புக் கிளர்ச்சிகளின் மத்தியிலும் பதவி விலகாமல் கிளர்ச்சி யாளர்களுக்கு எதிராக அடக்குமுறைகளைப் பிரயோகிக்கும் லிபியா நாட்டின் தலைவர் கேர்ணல் கடாபிக்கு எதிராக, லிபியா மீது தடைகளை விதிப்பதற்கு ஐக்கிய நாடுகள் அமைப்பின் பாதுகாப்புச் சபை தீர்மானித்திருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இந்த தடைகளின் அடிப்படையில் இதுவரை காலமும் லிபியாவுடன்





மேற்கொள்ளப்பட்ட ஆயுதப் பரிமாற்றங்கள் உடனடியாக நிறுத்தப்படுகின்றன.

மக்களின் எதிர்ப்பலையைக் கட்டுப்படுத்துவதாகக் கூறி ஏராளமானவர்களை கடாபி கொன்று குவித்துள்ள தாக குற்றச்சாட்டுக் கள் எழுந்துள்ள மையால் அவருக்கு எதிராக விசா ரணைகள் நடத்தப்பட வேண்டும் என்றும் ஐ.நா.பாதுகாப்புச் சபை தீர்மானித் துள்ளது.

கடாபியின் 41 வருட கால ஆட்சி முடிவிற்கு வரவேண்டும் என்று மேற்கத்தேய நாடுகள் தெரிவித்து வருகின்றன. எவரா வது தனது ஆட்சிக்காலத்தை தற்காத்துக்கொள்வதற்காக அடக்குமுறையைப் பிரயோகிப் பாராயின் அவர் அந்த நாட்டை ஆள்வதற்குத் தகுதியற்றவர் என்பதையே அது பிரதிபலிக்கும் என அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## தெரிந்து கொள்வோம்



✱ கோட்டையை தலைநகராகக்கொண்டு ஆட்சி செய்த மன்னன் காலத்தில் இலங்கைத் தீவு முழுவதும் ஒரு குடையின்கீழ் கொண்டு வரப்பட்டது. அது எந்த மன்னன் காலத்தில்

**ஆறாம் பராக்கிரமபாகு மன்னன் காலத்தில்**



✱ கண்ணதாசன் எழுதிய கடைசி நூல் எது?

**இயேசு காவியம்**



✱ '0' இலக்கத்தை முதலில் கையாண்டவர்கள் யார்?

**இந்தியர்கள்**



✱ 26ஆம் திகதி டிசம்பர் 2004 இல் ஏற்பட்ட சுனாமிக்குக் காரணமான நில நடுக்கம் எங்கு ஏற்பட்டது?

**இந்தோனேஷியாவின் சுமாத்திரா தீவுக்கருகிலுள்ள கடலில்**



✱ தென்னை ஆராய்ச்சி நிலையம் லுணுகலையில் அமைந்துள்ளது. அவ்வாறே, சோயா, அவரை ஆராய்ச்சி நிலையம் எங்குள்ளது?

**கன்னுருவவில் (பேராதனையில்)**



✱ மகா பராக்கிரமபாகு சிலையை அமைத்த மன்னன் யார்?

**நிசங்கமல்லன்**

✱ ஒருவரால் சுவாசிக்காமல் இருக்கக்கூடிய நேரம் எவ்வளவு?

**4 நிமிடம்**

✱ 'சிவப்புக் கோள்' என அழைக்கப்படும் கோள் எது?

**செவ்வாய்**



✱ உலகின் 'சக்கரைக் கிண்ணம்' என அழைக்கப்படும் நாடு எது?

**கியுபா**



✱ இந்தியாவில் சமூகத் தொண்டிற்காக, நோபல் பரிசு மற்றும் பத்ம ஸ்ரீ பட்டத்தைப் பெற்ற புகழ்பெற்ற பெண்மணி யார்?

**அன்னை தெரேசா அம்மையார்**



✱ இலங்கையின் நிலப்பரப் பளவில் சிறிய மாவட்டம் எது? சனத்தொகை மிகவும் கூடிய மாவட்டம் எது?

**சிறிய மாவட்டம் கொழும்பு, சனத்தொகை மிகவும் கூடிய மாவட்டமும் கொழும்பேயாகும்.**



✱ சீன மக்கள் குடியரசை மக்கள் புரட்சி மூலம் தாபித்தவர் யார்? எப்போது அதனைத் தாபித்தார்?

**மாஓசேதுங், 1949 இல்**



✱ இலங்கை கிரிக்கெட் அணியின் 'மாஸ்டர் பெட்ஸ்மன்' என அழைக்கப்பட்டவர் யார்?

**சனத் ஜயசூரிய**



✱ நெல்லினத்தின் விஞ்ஞானப் பெயர் என்ன?

**பிளாண்டஸ்**



✱ பொப் இசை மேதை என போற்றப்பட்ட இவர் தனது 50 ஆவது வயதில் காலமானார் அவரின் பெயர் என்ன?

**மைக்கல் ஜெக்சன்**

**தொகுப்பு: உடுவை பரந்தாமன்**





அற்லஸ் வழியே உலகைக் காண்போம்...


## அயர்லாந்து தேர்தலில் ஆளுங்கட்சி படுதோல்வி



அயர்லாந்தில் நடைபெற்ற தேர்தலில் பிரதமர் பிரான்கோவன் தலைமையிலான ஆளும் ஃபியானா ஃபேல் கட்சி படுதோல்வியடைந்துள்ளது.

பிரிட்டனிடமிருந்து அயர்லாந்து சுதந்திரத் தைப் பெற்ற பின்னர் ஃபியானா ஃபேல் கட்சி சந்தித்துள்ள முத லாவது மிகப் பெரிய தோல்வி இதுவாகும்.





பிரதமர் பிரான்கோவனின் அரசாங்கம் கடந்த நொவம்பர் மாதம் ஐரோப்பிய ஒன்றி யம் மற்றும் ஐ.நா. சபையின் நாணய நிதியம் ஆகியவற் றிடமிருந்து 85 யூரோ பில்லியன் நிதியைக் கடனாகப் பெற்றதையடுத்தே மக்களின் எதிர்ப்பலை அதிகரித்தது. அதுவே, பிரதமர் பிரான்கோவனின் தோல்விக் குக் காரணமாகவும் அமைந்து விட்டது.

இத்தேர்தலில் வெற்றிபெற்ற எதிர் கட்சியான 'ஃபின் கேல்' கட்சியின் தலைவரான என்டா கெனி தான் முன்னைய அரசாங்கம் பெற்றிருந்த கடன் ஒப்பந்தங்களிலுள்ள நிபந்தனை களில் திருத்தங்களைச் செய்வதாக மக்களுக்கு உறுதியளித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## பிரிட்டன் பிரதமரின் வீட்டில் பாதுகாப்புப் பணியில் பூனை!



**பிரிட்டன் பிரதமர் டேவிட் கெமரூன், வசிக்கின்ற உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் கடந்த சில தினங் களுக்கு முன்னர் எலித்தொல்லை அதிகரிக்கத் தொடங்கியுள்ளது. இந்த எலிகளை கட்டுப்படுத்துவதற்கு பிரதமர் பூனையொன்றை வளர்க்கத் திட்டமிட்டு, 'லெரி' என்ற பெயரையு டைய பூனையொன்றை தனது வாசஸ் தலத்திற்கு கொண்டுவந் தார். நான்கு வயதுடைய இந்தப் பூனை அநாதர வாக வீதியோரங்களில் சுற்றித் திரிந்த ஒரு பூனை யாகும். இந்தப் பூனையை லண்டனிலுள்ள 'பெட்ட ஸீடோக்ஸ் என்ட் கெட்ஸ்' என்ற மிருகங் களின் பாதுகாப்பு அமைப்பினர் கண்டெ டுத்து வளர்த்து வந்தனர். அந்த அமைப்பினரே, மேற்படி பூனையை பிரதமர் கெமரூனுக்கு கொடுத்துள்ளனர்.**

**அற்லஸ் கேள்வி - 298**

**கேள்வி:** லிபியாவில் கேர்ணல் கடாபி எத்தனை வருடகாலம் ஆட்சிபுரிந்து வந்துள்ளார்....?

**சரியான விடை................................**

**உங்கள் விடையுடன்- பெயர், முகவரி, வகுப்பு, பாடசாலை முகவரி, வீட்டு முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம் முதலிய விபரங்களைத் தபாலட்டையில் மாத்திரம் எழுதி அனுப்ப மறவாதீர்கள்.**

**அனுப்ப வேண்டிய முகவரி:**

**அற்லஸ் வழியே உலகைக் காண்போம், கேள்வி - 298, விஜய், த.பெ.எண் 2037, கொழும்பு.**

**போட்டி இல - 296 இன் சரியான விடை: 18 நாட்கள்**

**பரிசு பெறுவோர்**

எம்.நிர்சிதசர்மா,
46/6, இராமகிருஷ்ணபுரம்,
கல்லடி, மட்டக்களப்பு.

பி.ஹரிபிரசாந்த்,
69B, காமினி ஆரியதிலகபுர,
தரவளை வீதி, டிக்கோயா.

கீர்த்தனா குணநாயகம்,
அளவெட்டி கிழக்கு,
மணற்புலம், அளவெட்டி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீர்ப்பு குறித்து மேன் முறையீடு



பாகிஸ்தான் கிரிக்கெட் வீரரான மொஹமத் ஆமிர், சல்மன் பட் ஆகியோர் சர்வதேச கிரிக்கெட் சபை தமக்கு எதிராக விதித்துள்ள தடையை எதிர்த்து மேன்முறையீடு செய்யவுள்ளதாக அறிவித்துள்ளனர்.

கடந்த வருடம் இங்கிலாந்துக்கு எதிரான போட்டியில் சூதாட்டத்தில் ஈடுபட்டதாகக் கருதியே இவர்கள் மீது விசாரணைகள் நடத்தப்பட்டிருந்தன. அந்தவகையில், சல்மன் பட்டுக்கு 10 வருட போட்டித் தடையும், மொஹமட் ஆஷிப்புக்கு 7 வருட போட்டித் தடையும், மொஹமட் ஆமிர்க்கு 5 வருட போட்டித் தடையும் விதிக்கப்பட்டது.

போதிய ஆதாரங்களுடனேயே இவர்கள் மீது இறுதித் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளதாக ஐ.சி.சி.தெரிவித்துள்ளது. இருப்பினும், இந்தத் தீர்ப்புக் குறித்து அதிருப்தி தெரிவித்தே ஆஷிப், பட் ஆகிய இரண்டு பேரும் மேன் முறையீடு செய்யவுள்ளதாக அறிவித்துள்ளனர்.

# பாகிஸ்தானிடம் இலங்கை தோற்றதன் காரணம்



உலகக் கிண்ணப் போட்டிகள் ஆரம்பமாவதற்கு முன்னதாக இலங்கை அணியின் சாதகமான அம்சங்களை மட்டுமே பார்த்து வந்தவர்கள், பாகிஸ்தான் அணியுடனான தோல்வியின் பின்னர்தான் இலங்கை அணியின் பாதகமான அம்சங்களைப் பற்றி பேசத் தொடங்கியுள்ளனர்.

இதிலுள்ள பிரதான அம்சம்தான் இலங்கை அணியின் நடுவரிசை துடுப்பாட்ட வீரர்கள் பற்றியதாகும். பாகிஸ்தானுடனான போட்டியின்போது, நடுவரிசை துடுப்பாட்ட வீரர்கள் வேகமாக ஓட்டங்களை எடுக்காததே தோல்விக்கான காரணம் என்று பேசப்படுகின்றது. அப்படியாயின், தற்போது நடுவரிசையில் உள்ள வீரர்கள் எந்தவகையில் தெரிவு செய்யப்பட்டார்கள்? என்ற கேள்வி எழுகின்றது. அண்மைக்காலங்களில் உள்ளூர் போட்டிகளில் சிறப்பாகத் தமது திறமைமைகளைக் காட்டியவர்கள்தான் இவ்வாறு தெரிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. ஆக! உள்ளூர் போட்டிகளில் திறமையைக் காட்டுபவர்கள் சர்வதேச மட்டத்திலான பிற நாட்டு அணியினருக்கு ஈடாக விளையாடக்கூடியவர்களாக இருப்பார்களா? என்ற கேள்வியும் தொக்கி நிற்கின்றது.



கடந்த கால ஓட்ட அட்டவணையை மாத்திரம் வைத்து வீரர்களை இனங்காண்பதைவிட, ஆடுகளத்தின் சூழ்நிலைக்கேற்ப தீர்மானங்களை எடுத்து, சமயோசிதமாக விளையாடக்கூடியவர்களாக இருத்தலே அவசியம். அதற்குரிய பயிற்சிகளையும் ஆலோசனைகளையும் உரியவர்கள் வழங்காத பட்சத்தில் வெற்றியை கோட்டைவிடும் சந்தர்ப்பங்களே தொடரும்.

# இந்தியா எவ்வாறு வெற்றியைக் கோட்டைவிட்டது?



இந்தியா-இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான லீக் போட்டியில் இந்திய அணி 338 ஓட்டங்களை எடுத்த போதிலும், இறுதியில் வெற்றியைக் கோட்டைவிட்டது. அதே சம ஓட்ட எண்ணிக்கையை இங்கிலாந்து அணியும் எடுத்தமையால் போட்டி சமநிலையில் முடிவுற்று, இரண்டு அணிக்கும் தலா ஒரு புள்ளி பிரித்து வழங்கப்பட்டது.

இந்திய அணியைப் பொறுத்தவரையில் வழக்கம் போலவே, இறுதிநேர 'டென்ஷன்' காரணமாக வெற்றி தவறிப் போய்விட்டது. கடந்த காலங்களில்கூட, இந்திய அணி



இதேபோன்று வெற்றியின் விளிம்பிற்கு வந்து வெற்றியைத் தவறவிட்ட சந்தர்ப்பங்கள் ஏராளம். போட்டியின் இறுதிக் கட்டங்களில் எதிரணியின் உளவியல் தாக்குதலுக்கு மிக இலகுவாகவே இந்திய அணி வீழ்ந்துவிடுவதுண்டு. அந்த சந்தர்ப்பங்களில் இந்திய அணி எப்போதுமே தந்திரோபாயங்களைப் பாவித்ததில்லை. இங்கிலாந்துடனான குறித்த போட்டியில் கூட இறுதி ஓவரை சஹிர்கான் அல்லது ஹர்பஜன் சிங் ஆகிய இரண்டுபேரில் ஒருவருக்கு வழங்கியிருக்கலாம். அவர்கள் சமயோசிதமாகப் பந்துவீசக்கூடிய பக்குவம், அனுபவம் உள்ளவர்கள்.ஆனால், அவர்களை அணியின் தலைவர் டோனி இறுதி ஓவருக்குப் பயன்படுத்தாதது டோனி செய்த பெரும் தவறு என்றே கூறலாம். அதனால், வெற்றிக்கான அருமையான வாய்ப்பை இந்திய அணி கோட்டைவிட்டது என்றே கூறவேண்டும்.

## முன்னாள் செம்பியன்கள் இம்முறை அகௌரவிப்பாம்

1996 ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் செம்பியன் கிண்ணத்தை வென்ற இலங்கை அணியில் இடம்பெற்றிருந்த வீரர்கள் சிலர், இம்முறை நடைபெறுகின்ற உலகக் கிண்ணப் போட்டிகளின்போது அகௌரவப்படுத்தப்பட்டிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

அதாவது, இம்முறை உலகக் கிண்ணப் போட்டிகளை நேரில் கண்டுகளிப்பதற்காக, முன்னாள் செம்பியன் வீரர்களுக்கு விசேட 'இலவச' டிக்கட்டுகள் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. இதற்கமைய, குறித்த வீரர்கள் தமக்கான இலவச டிக்கட்டுகளை பெற முயற்சித்தபோது, அவர்கள் முதலில் தமது அடையாள அட்டை இலக்கத்தை அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டனராம். இவ்வாறு தம்மிடம் அடையாள அட்டை இலக்கத்தைக் கேட்டமை தம்மை அகௌரவப்படுத்தி விட்டதாக அவர்களில் சிலர் தெரிவித்துள்ளதுடன், இது குறித்து முன்னாள் வீரர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில்; ''இந்த சம்பவத்தின் காரணமாக, போட்டிகளைப் பார்க்க வேண்டும் என்ற ஆவல் இல்லாமல் போய்விட்டது'' என்றும் தெரிவித்துள்ளார்.

# தெற்காசிய கடற்கரைப் போட்டிகள் ஒத்திவைப்பு

இலங்கையில் நடைபெறவுள்ள தெற்காசிய கடற்கரை விளையாட்டுப் போட்டிகள் இரண்டு மாதங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக தெற்காசிய ஒலிம்பிக் சங்கம் அறிவித்துள்ளது.

போட்டிகளில் கலந்துகொள்ளவுள்ள நான்கு நாடுகள் கேட்டுக்கொண்டதற்கிணங்கவே இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

ஏற்கனவே, இப்போட்டிகள் இவ்வருடம் ஓகஸ்ட் மாதம் 22 ஆம் திகதி தொடக்கம் 29 ஆம் திகதி வரை நடைபெற இருந்தது. புதிய





தீர்மானத்தின்படி, ஒக்டோபர் மாதம் 8 ஆம் திகதி தொடக்கம் 14 ஆம் திகதி வரை நடைபெறும்.

ஓகஸ்ட் மாதம் ரமழான் பண்டிகைக் காலம் என்றபடியால் அக்காலப் பகுதியில் போட்டிகளை நடத்த வேண்டாம் என்று பங்களாதேஷ், பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், மாலைதீவுகள் ஆகிய நாடுகள் கேட்டுக்கொண்டதற்கிணங்கவே இப்போட்டிகள் ஒத்தி வைக்கப்பட்டதாக சுட்டிக்காட்டப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜொஹன்னஸ் கெப்லர் விண்கலம் ISS உடன் இணைந்தது

ஐரோப்பாவின் அதிநவீன சரக்கு விண்கலமான ஜொஹன்னஸ் கெப்லர் விண்கலம் கடந்த மாதம் சர்வதேச விண்வெளி மையத்துடன் (ISS) வெற்றிகரமாக இணைந்தது. ஆளற்ற இந்த முழுமையான தானியங்கி விண்கலம், விண்வெளி நிலையத்தின் 'சுவெஸ்தா' என்ற கலத்துடன் இணைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விண்கலமானது தனது பயணத்தின்போது, விண்வெளி நிலையத்திலுள்ள விண்வெளி வீரர்களுக்குத் தேவையான எரிபொருள், உணவு, காற்று மற்றும் பல உபகரணங்களையும் கொண்டு சென்றுள்ளது.

பிரெஞ்ச் கயானாவில் இருந்து



பெப்ரவரி 16 இல் புறப்பட்ட இவ்விண்கலம், அரை மில்லியன் கிலோமீற்றர் தூரம் பயணித்து சர்வதேச விண்வெளி மையத்துடன் இணைந்துள்ளது. இத்தாலிய விண்வெளி வீரரான பவோலோ நெஸ்போலி மற்றும் ரஷ்ய விண்வெளி வீரரான அலெக்சாண்டர் கலேரி ஆகியோர்'சுவெஸ்தா' கலத்தினுள் இருந்தவாறு இந்த இணைப்பைப் பார்வையிட்டுள்ளனர்.

ஜொஹன்னஸ் கெப்லர் என்ற இந்த சரக்கு விண்கலம் ஐரோப்பிய விண்வெளி நிறுவனத்தின் Automated Transfer Vehicle (ATV) என்ற வகையைச் சேர்ந்த இரண்டாவது தானியங்கி விண்கலமாகும். சர்வதேச விண்வெளி மையம் தற்போது பூமியில் இருந்து 350 கி.மீ. உயரத்தில் நிலைகொண்டுள்ளது. இந்த உயரத்தை மேலும் அதிகரிக்கச் செய்வதே கெப்லரின் முக்கிய பணியாக இருக்கின்றது.

இந்த விண்கலம் ஜூன் மாதமளவில் பூமிக்குத் திரும்பும் என எதிர்பார்க்கப்படுகிறது. அப்போது அது விண்வெளி நிலையத்தில் உள்ள கழிவுகளைச் சேகரித்து வந்து, பூமியில் அவற்றைத் தானியங்கியாக எரித்து பசுபிக் பெருங்கடலில் வீசும் என்று தெரிவிக்கப்படுகின்றது.






## ஆறு கோள்களையுடைய புறக்கோள் தொகுதி கண்டுபிடிப்பு

பூமியில் இருந்து சுமார் 2,000 ஒளியாண்டுகள் தூரத்தில் அமைந்துள்ள கெப்லர்-11 என்ற விண்மீனைச் சுற்றி வருகின்ற ஆறு புறக்கோள்களை நாஸாவின் கெப்லர் திட்ட வானியலாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

இந்த ஆறு கோள்களும் பூமியைவிட 2-4 1/2 மடங்கு ஆரையையும் 2-13 மடங்கு வரை திணிவையும் கொண்டுள்ளன. இவற்றில் ஐந்து கோள்கள், எமது சூரியனை புதன் கோள் சுற்றி வருவதைவிட, குறைந்தளவு தூரத்தில் இருந்தவாறு தமது சூரியனை (கெப்லர் 11) சுற்றி வருவதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

'கெப்லர்-11' என்பது ஒரு குறிப்பிடத்தக்க சிறப்பான கோளமைப்பாகும். இந்த ஆறு புறக்கோள்களும் பாறைகளையும் வாயுக்களையும்



கெப்லர்-11 தொகுதியுடன் எமது சூரியத் தொகுதி ஒப்பீடு


கொண்டுள்ளன. நீரையும் இவை கொண்டிருக்கலாம் என கெப்லர் திட்ட ஆய்வாளர் ஜெக் லிசாவர் தெரிவித்துள்ளார்.

கெப்லர் திட்டத்தின் மூலம் இதுவரை சுமார் 1,235 புதிய கோள்கள் கண்டறியப்பட்டுள்ளன. ஏற்கனவே கெப்லர் திட்டத்தின்மூலம் கெப்லர்-9 என்ற மூன்று கோள்களைக்கொண்ட தொகுதி ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டது. அத்துடன், கடந்த மாதத்தில் கெப்லர்-10b என்ற பாறைகளைக்கொண்ட புறக்கோள் ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## வால்வெள்ளி ஆராய்ச்சியில் 'ஸ்டார்டஸ்ட்' விண்கலம்

நாஸாவின் 'ஸ்டார்டஸ்ட்' விண்கலம் கடந்த மாத நடுப்பகுதியளவில் 'டெம்ப்ல் 1 (Temple 1) வால்வெள்ளியை அண்மித்துள்ளது. இதனை அடுத்து. இந்த விண்கலமானது குறித்த வால்வெள்ளியில் பல்வேறு ஆராய்ச்சிகளில் ஈடுபடவுள்ளதாக வானியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

'டெம்ப்ல் 1' வால்வெள்ளியை 2005 ஆம் ஆண்டில் மற்றுமொரு விண்கலம் ஆய்வு செய்தது. அதன் பிறகு, தற்போது ஸ்டார்டஸ்ட் விண்கலம் அதனை அண்மித்துள்ளது. இந்த விண்கலமானது டெம்ப்ல் 1 வால்வெள்ளியை பல கோணங்களில் படமெடுக்கும். அந்தப் படங்களின்மூலம் கடந்த ஆறு ஆண்டுகளில் குறித்த வால்வெள்ளியில் ஏற்பட்ட மாற்றங்களை அறியலாம் என வானியலாளர்கள் நம்புகின்றனர். 300 கிலோகிராம் எடையுள்ள ஸ்டார்டஸ்ட் விண்கலம், 1999 ஆம் ஆண்டு பெப்ரவரி 7 ஆம் திகதி விண்ணுக்கு அனுப்பப்பட்டது. சுமார் 11 ஆண்டுகளின் பின்னரே அது டெம்ப்ல் 1 வால்வெள்ளியை அண்மித்துள்ளது.



குறித்த வால்வெள்ளியின் நடுப்பகுதியில் இருந்து சுமார் 200 கி.மீ.தூரத்தில் இருந்தவாறு ஸ்டார்டஸ்ட் விண்கலம் புகைப்படங்களை எடுக்கும் என்று கருதப்படுகின்றது. மிகத் துல்லியமான 70 படங்களை எடுக்கும் வண்ணம் ஸ்டார்டஸ்ட் கட்டளையிடப்பட்டுள்ளது. தவிர, இந்த விண்கலத்துடன் பொருத்தப்பட்டுள்ள ஏனைய உபகரணங்கள் டெம்ப்ல் 1 வால்வெள்ளியின் சுற்றுப்புறச் சூழலை ஆராயும்.

ஸ்டார்டஸ்ட்-டெம்ப்ல் 1 வால்வெள்ளியின் சந்திப்பு பூமியில் இருந்து 336 மில்லியன் கி.மீ.தூரத்தில் நிகழ்ந்துள்ளது. டெம்ப்ல் 1 வால்வெள்ளியானது 1867 ஆம் ஆண்டில் வில்லெம் டெம்ப்ல் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது. இது சூரியனை 5.5 ஆண்டுகளுக்கு ஒரு முறை சுற்றி வருகின்றது.



## டிஸ்கவரியின் இறுதிப் பயணம்

அமெரிக்காவின் டிஸ்கவரி விண்ணோடம் கென்னடி விண்வெளி மையத்தில் இருந்து விண்வெளிக்கான அதன் இறுதிப் பயணத்தைக் கடந்த மாதம் 24 ஆம் திகதி மேற்கொண்டது.

ஆறு விண்வெளி வீரர்களுடன் பயணித்திருக்கும் இந்த விண்வெளி ஓடம் விண்ணில் 11 நாட்கள் தங்கியிருக்கும்.

தனது பயணத்தின்போது, சர்வதேச விண்வெளி மையத்திற்குத் தேவையான புதிய களஞ்சிய அறை ஒன்றையும் உயர் தொழில்நுட்பத்துடன்கூடிய இயந்திரம் ஒன்றையும் அது காவிச் சென்றுள்ளது.

டிஸ்கவரியின் இறுதிப் பயணக் காட்சியை விண்வெளி மையத்துக்குச் செல்லும் வீதியெங்கிலும் இருந்தவாறு பல்லாயிரக்கணக்கானோர் கண்டுகளித்தனர்.

1984 ஆம் ஆண்டில் முதல் முறையாக விண்ணுக்கு ஏவப்பட்ட டிஸ்கவரி விண்கலம், அன்றிலிருந்து 39 விண்வெளிப் பயணங்களில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. அதன்படி, டிஸ்கவரியின் 39 ஆவது பயணம் இதுவாகும். இப்பயணத்துடன் டிஸ்கவரி விண்கலம் மொத்தம் 230 மில்லியன் கி.மீ.தூரம் வரை பயணித்திருப்பதுடன், இந்தப் பயணத்திட்டத்திற்கு எஸ்டிஎஸ்- 133 (STS-133) என பெயரிடப்பட்டுள்ளது.

நாஸாவின் விண்ணோடங்கள் அனைத்தும் இவ்வாண்டு இறுதிக்குள் ஓய்வெடுக்க உள்ளதால், இனிவரும் காலங்களில் ரஷ்யாவின் 'சோயுஸ்' விண்கலத்தின்மூலமே அமெரிக்க விண்வெளி வீரர்கள் விண்வெளிக்கு பயணிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கமைய, நாஸாவின் அடுத்த விண்வெளித் திட்டங்களில் ஒன்றாக சிறுகோள்களை நோக்கி மனிதர்களை அனுப்பும் திட்டம் இருக்கின்றது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





தயாரிப்பு - நுஸ்பா கௌஸ்


1, 2, 3, 4, 5 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி 2011.03.16ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

**அற்லஸ் அறிவுக்கு விருந்து 303**
**விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு**

## 1. A பகுதியிலுள்ள படத்தை B பகுதியில் இனங்கண்டு X அடையாளமிடுக




## 2. சரியான எண்ணிக்கையுடன் இணைக்க




## 5. எதிர்ப்பதம் தருக

1. ஏற்றம் -..............................
2. இளமை -..............................
3. அண்மை -..............................
4. ஞாபகம் -..............................
5. மயக்கம் -..............................

## 3. இடைவெளியை நிரப்புங்கள்



n e t



v _ st



t _ nt



n _ st

## 4. பொருத்தமான ஒருமைச் சொல்லில் கோடிடுக

1. பற்கள் - பல்/பல்லு
2. தீமைகள் - தீன்மை/ தீமை
3. கலங்கள் - கலன்/கலம்
4. பழங்கள் - பழம்/கனி
5. பொருட்கள் - பொருள்/பொருல்

## அற்லஸ் அறிவுக்கு விருந்து - 300 பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

**போட்டி: 01.**
அப்துர் றஹ்மான்,
34/1, மெத்தைப்பள்ளி வீதி, காத்தான்குடி-02

**போட்டி: 02**
எம்.மயூரன், 238, தெல்தோட்டை வீதி, கலஹா.

**போட்டி: 03**
ஏ.வாசவி, 26, கதிரவேலு ஒழுங்கை, அரியாலை.

**போட்டி: 04**
உ.துளசிகா,
40, கோணாவளை ஒழுங்கை, கொக்குவில்.


**போட்டி: 05**
எம்.ராஷித், 85/1, பதூதா வீதி, மாத்தறை.

**பாராட்டுப் பெறுவோர்:**

- கி.தட்சன்யா, செட்டிப்பாளையம்.
- சா.ஸிறீன், சாய்ந்தமருது-07.
- பு.தகிந்தனன், கோட்டைக்கல்லாறு-02.
- மாஷிதா ரிஸ்வி, பேருவளை.
- ர.டினோஜா, முல்லைத்தீவு.
- எ.ஃப்.மிர்பஹா, அலுத்கம.
- எ.ஃப்.மின்ஹா, ஹிரிபிடிய.
- எ.ஃப். சஹ்லா, ஹொரம்பாவ.
- ஹனாஸ் நியாஸ், திக்குவல்லை.
- எஸ்.கிறிஸ்டினா, வத்தளை.


## அறிவுக்கு விருந்து - 300 விடைகள்

**போட்டி: 02**



A-20 B-6 C-8
D-19 E-1

**போட்டி: 03**



**போட்டி: 04**

1. கோதுமை -wheat
2. பாகற்காய் -bitter gourd
3. பலா மரம் -jack tree
4. உடும்பு -iguana
5. நண்டு -crab
6. மிளகு -pepper

**போட்டி: 05**

1. முள்-முட்கள்
2. கல்-கற்கள்
3. தேனீ- தேனீக்கள்
4. சொல்-சொற்கள்
5. மரம்-மரங்கள்

## விஜய் வாசகர் மடல்



உன்னில் சுவாரஸ்யமான, மாணவர்களுக்குப் பயனளிக்கக்கூடிய பல ஆக்கங்களைக் காணக்கூடியதாக இருந்தது. 'மாணவர்களிடையே நினைவாற்றல்', 'உலக மகாயுத்தங்கள்', 'நேரத்தைக் கணிக்கும் கருவியின் கதை', 'வேப்ப மரத்தடிப் பேய்' போன்றவற்றை ஆர்வத்துடனும் மகிழ்வுடனும் வாசித்தேன்.

**ஹஸீனா ஹலால்டீன்,**
**மார்டீஸ் ஒழுங்கை, கொழும்பு-12.**

'உலகக்கிண்ண கால அட்டவணை' எமக்குப் பெரிதும் உதவுகின்றது. வெற்றி பெறுகின்ற அணி மற்றும் அதன் புள்ளி போன்றவற்றை எழுத இடம் விட்டிருப்பது உபயோகமாக உள்ளது. விஜய்யே! உனது சேவை தொடர எனது வாழ்த்துக்கள்.

**ந.பத்மபிரியன், தரம்-11B, யாழ்.இந்துக் கல்., யாழ்ப்பாணம்.**

உன் ஏட்டில் பதிந்துள்ள முத்தான தகவல்கள் அனைத்தும் சுப்பர். 'facebook பற்றிய தகவல்', 'பாதணி தோன்றிய காலம்', நட்சத்திர மண்டலம் என்றால் என்ன?', 'தபாற்சேவை பற்றிய அறிமுகம்' போன்ற அனைத்து முத்துக்களையும் தொகுத்து என்மனதில் அணிந்துவிட்டேன். உனக்கு ஓர் அன்பான வேண்டுகோள்..! புவியியல் சார்ந்த விடயங்களை மேலும் பிரசுரிக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

**த.அபிராமி, கலைமகள் வீதி, பெரிய கல்லாறு-02.**

புதன்தோறும் புதுமை படைக்கும் விஜய்யே! 'கல்வி முகாமைத்துவம்', 'வாரம் ஒரு நாடு', 'வேப்பமரத்தடிப் பேய் கதைத் தொடர்', 'தெரிந்துகொள்வோம்' போன்றன எனக்கு மிகவும் பிடித்த பகுதிகளாகும். மேலும், உன்னில் பிரசுரமாகும் அனைத்தும் வரவேற்கத்தக்கவை.




**என்.ஸப்ரினா, தரம்-12(வர்த்தகம்),**
**கெகுணகொல்ல தே.பா.,**
**கெகுணகொல்ல.**

'எதிர்ப்புச் சக்திக்கே எதிர்ப்பைக் காட்டும் பக்றீரியா' எனும் ஆக்கம் சுவாரஷ்யமாக இருந்தது. 'வேப்பமரத்தடிப் பேய்' திகில் நிறைந்த தொடர்கதையென்பதால் மிகவும் ஆவலுடன் அதனை வாசிக்கிறேன். 'நேரத்தைக் கணிக்கும் கருவியின் கதை' அற்புதமாக இருந்தது.

**அப்துர் ரஹ்மான்,**
**டீ.டி.ஏ.கல்லூரி.,பரகஹதெனிய.**

என் கல்வி வளர்ச்சிக்காக நீ ஒவ்வொரு வாரமும் தருகின்ற புதிய ஆக்கங்கள் மிகவும் பிரயோசனம் அளிக்கின்றன. 'இலங்கையின் தேசிய கீதம்', 'தபாற்சேவை', 'பாதணி தோன்றிய காலம்', 'பேஸ்புக் பற்றிய தகவல்கள்', 'பக்றீரியா பற்றிய ஆக்கம்', 'நேரத்தைக் கணிக்கும் கருவி' என்பன கல்வி விருத்திக்கு அதிகம் உதவுவதாக அமைந்தன.

**எம்.ஆர்.சம்னா, கோழிக்கடை வீதி, வாழைச்சேனை-05.**

'மாணவர் நினைவாற்றல்', 'தபாற்சேவை', 'வாரம் ஒரு நாடு', 'உலக மகாயுத்தங்கள்', 'சிறுகதைகள்', 'கணினியின் பயன்கள்', 'தெரிந்துகொள்வோம்', 'நட்சத்திர மண்டலம்' போன்றன பிரமாதம். நதி, வண்டல் மண்ணை அடித்து வந்து விவசாய நிலத்தை எவ்வாறு போஷிக்கின்றதோ; அவ்வாறே, ஒவ்வொரு வாரமும் நல்ல விடயங்களை தாங்கி வந்து எங்களின் கல்வியை போஷிக்கின்றாய். நீ என்றும் எங்கும் நிலைபெற்றிருக்க இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

**ஏ.எம்.அஸாம், தரம்-11A, தி/கிண்ணியா மத்.வித்., கிண்ணியா.**

நான் 2006 ஆம் ஆண்டிலிருந்து உன்னை ஆவலோடு வாங்கிப் படித்து வருகின்றேன். நீ தொடர்ந்தும் பயன்மிக்க தகவல்களை நமக்கு அள்ளி வழங்குகின்றாய். உன்னில் பிரசுரமான 'தபாற்சேவை', 'நேரத்தைக் கணிக்கும் கருவி', போன்றவற்றினூடாக, அவற்றின் வரலாற்றினை அறியக்கூடியதாக இருந்தது. சிறுகதைகளும் 'வேப்பமரத்தடிப் பேய்' தொடர்கதையும் சுவாரஸ்யமானவை. உன்னால் பல படிப்பினைகளையும் பெறுகின்றோம்.

**எம்.ருஸ்மின், குருந்துகொல்ல, வெரெல்லகம.**

இந்த இதழில் (09.03.2011) வெளியாகியிருக்கும் ஆக்கங்கள் குறித்து உங்கள் விமர்சனங்களை தபாலட்டையில் மாத்திரம் எழுதி எமக்கு அனுப்பி வையுங்கள்.
அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 16.03.2011.

அனுப்ப வேண்டிய முகவரி:



**வாசகர் மடல், 'விஜய்' த.பெ.எண் 2037, கொழும்பு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலக்கியங்களில் இடம்பெற்ற கொல்லிமலை

சங்க இலக்கியங்களான சிலப்பதிகாரம், மணிமேகலை, புறநானூறு, ஐங்குருநூறு போன்றவற்றில் இடம்பெற்ற கொல்லிமலை பற்றிய பல வியப்பான தகவல்கள் வெளியிடப்படுகின்றன. தமிழ்நாட்டின் நாமக்கல் மாவட்டத்தில் உள்ள இந்த கொல்லிமலை சுமார் 280 கிலோமீற்றரில் அமைந்துள்ளது.

இந்த கொல்லிமலை 'கொல்லிப் பாவை' என்றும் அழைக்கப்படுகின்றது. அத்துடன், இதனை எட்டுக்கை அம்மனே பாதுகாத்து வருவதாகவும் நம்பப்படுகிறது. புராணக் கதைகளின்படி, முனிவர்கள் தியானம் செய்வதற்கு அமைதியான ஓரிடத்தைத் தேடி இறுதியில் கொல்லிமலையை தேர்ந்தெடுத்தனராம். எனினும், முனிவர்கள் தமது சமயச் சடங்குகளை ஆரம்பித்ததும் அசுரர்கள் கொல்லிமலையில் ஊடுருவி முனிவர்களின் தியானத்தைத் தடுத்தார்களாம். இதனால், முனிவர்கள் கொல்லிப்பாவையை வணங்கி தமக்குப் பாதுகாப்புக் கோரியதையடுத்து அவர் தனது வசீகரப் புன்னகையின்மூலம் அசுரர்களை விரட்டியடித்ததாகக் கூறப்படுகிறது. அன்று முதல் இந்தக் கொல்லிமலையும், கொல்லிப்பாவையும் மக்களால் புனிதமாகப் போற்றி வழிபடப்பட்டு வருகின்றன.






இந்த மலையில் ஏராளமான மூலிகைகள் இருக்கின்றன. இம்மூலிகைகள் நோய்களிலிருந்து மக்களைக் குணப்படுத்தி சுகத்தையும் பலத்தையும் வழங்குகின்றனவாம். கொல்லிமலை என்றால் உண்மையில் நோய்கள், முதுமை, தளர்ச்சி என்பனவற்றை கொல்லும் மலை என்றும் கூறப்படுகின்றது.

இந்தக் கொல்லிமலையானது பச்சை இலைக்காடுகளால் சூழப்பட்டுள்ளது. இங்கு ஆலயம் ஒன்று அமைந்துள்ளபடியால் இந்த மலை புனித யாத்திரைத் தலமாகவும் விளங்குவதோடு, ராசிபுரம் என்னுமிடத்தில் உள்ள சிவன் கோவிலுக்கு இங்கிருந்து இரகசியப் பாதை ஒன்று இருப்பதாகவும் நம்பப்படுகிறது. இந்த சிவன் கோவிலானது 1ஆம் அல்லது 2ஆம் நூற்றாண்டில் இப்பகுதியை ஆட்சி செய்த வல்வில் ஓரி என்பவரால் கட்டப்பட்டது என்றும் கூறப்படுகிறது.



## விநோத உயிரினம் 'யானைமீன்'

நீரில் வாழும் விநோத உயிரினங்களில் ஒன்று யானைமீன். இந்த மீனின் வாய் தாழ்ந்தும், தாடை யானையின் தும்பிக்கை போன்றும் தோற்றம் அளிப்பதால் இதற்கு 'யானைமீன்' என்று பெயர். இந்தமீன் அநேகமாக, சேற்று நீரிலும், நீரில் இருண்ட பகுதிகளிலும் கடல் தாவரங்கள் மற்றும் பாறைகளுக்கு அடியிலும் வாழ்கின்றது. முன்பக்கத் துடுப்புக்கள் மூலம் தண்ணீரைப் பின்னால்



தள்ளிக் கடலில் வேகமாக நீந்தும். இதன் தனித்துவம் மிக்க துடுப்புக்களின் அமைப்பு இதற்கு கடலில் வேகமாக நீந்த உதவி புரிகிறது. பொதுவாக 200 முதல் 500 மீற்றர் வரை ஆழம் உள்ள இடத்தின் அடிப்புறத்தில் இது வாழ்கிறது. பெண் இனம் முட்டையிட மட்டுமே ஆழமற்ற பகுதிக்கு வருகிறது. அந்த வேளைகளிலேயே இவை மீனவர்களின் வலைகளில் சிக்கி விடுகின்றன. இதன் முட்டைகள் கடலில் மிதந்து செல்லும்போது, சூரிய வெப்பத்தால் பொரிக்கப்பட்டுக் குஞ்சுகள் வெளியாகின்றன.

## மனித வரலாற்று கலாசார அருங்காட்சியகம்

மனித வரலாறு மற்றும் கலாசாரம் பற்றிய சான்றுகளை அறியும் அருங்காட்சியகமாக லண்டனில் உள்ள பிரிட்டிஷ் மியூசியம் (British Museum) திகழ்கிறது. இங்கு சுமார் 70 லட்சத்துக்கும் மேற்பட்ட வரலாற்று தகவல்களை விளக்கும் சான்றுகள் காணப்படுகின்றன. மனித வரலாற்றின் ஆரம்பகாலம் முதல் தற்காலம் வரையிலான கலாசாரத் தடங்களை இங்கு காணலாம். இந்த அருங்காட்சியகம் 1753 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. முதன்முதலாக 1759 ஆம் ஆண்டு ஜனவரி 15 ஆம் திகதி இது பொது மக்களின் பார்வைக்காகத் திறந்து வைக்கப்பட்டது.

1997 ஆம் ஆண்டு இந்தக் கட்டடத்தில் இயங்கி வந்த பிரித்தானிய நூலகம் (British library) புதிய இடத்துக்கு இடம்மாறியது. அதுவரை இக் கட்டடம் நூலகத்தையும், புராதன பொருள் அருங்காட்சியகத்தையும் கொண்டியங்கியதால் விசேடத்துவம் மிக்கதாக விளங்கியது.





### ஸ்டேட் ஹெர்மிடேஜ்



ரஷ்யாவில் உள்ள ஸ்டேட் ஹெர்மிடேஜ் என்னும் அருங்காட்சியகம் உலகின் மிகப் பெரிய அருங்காட்சியகங்களில் ஒன்றாகவும் பழைமை மிக்கதாகவும் திகழ்கிறது. கலை, கலாசாரப் பொருட்களைக் கொண்டுள்ள இந்த அருங்காட்சியகம் 1764 இல் ஸ்தாபிக்கப்பட்டது. 1782 ஆம் ஆண்டு பொது மக்கள் பார்வைக்காக திறந்து வைக்கப்பட்டது.

உலகின் மிகப் பெரிய ஓவியங்கள், கிராபிக் வேலைப்பாடுகள், சிற்பங்கள், புதைபொருட்கள் உட்பட, சுமார் 30 லட்சம் வரலாற்று சான்றுகளைக் கொண்டதாக இந்த அருங்காட்சியகம் திகழ்கிறது.

விஜய் சந்தா விபரம்

| கொழும்பில் வசிப்போர் (நேரடியாகப் பெறுவதற்கு) | | கொழும்பிற்கு வெளியே வசிப்போர் (தபாலில் பெறுவதற்கு) | |
|---|---|---|---|
| 6 மாதத்திற்கு | ரூபா 390/= | 6 மாதத்திற்கு | ரூபா 780/= |
| 1 வருடத்திற்கு | ரூபா 780/= | 1 வருடத்திற்கு | ரூபா 1560/= |

கீழ்காணும் கூப்பனை நிரப்புங்கள். (ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது.)

பெயர் - ..............................
..............................
முகவரி - ..............................
..............................
தொ.பேசி - ..............................
பத்திரிகையின் பெயர் - ..............................

விஜய் Subscription
For 6 Months/ 1 Year
(அவசியமற்றதை வெட்டிவிடவும்)
..............................
கையொப்பம்/திகதி

மேற் காணப்படும் விபரத்திற்கேற்ப பணத்தை தபாலகத்தில் காசுக்கட்டளையாகச் செலுத்தி குறித்த காசுக்கட்டளையை மாற்றக்கூடிய தபால் கந்தோர் - Slave Island Post Office என்று குறிப்பிடவும். குறித்த காசுக்கட்டளையையும் இங்கு நிரப்பப்பட்ட கூப்பனையும் ஒன்றாக இணைத்து பதிவுத் தபாலில் எமக்கு அனுப்பி வைக்கவும்.

முகவரி:
SUBSCRIPTION MANAGER,
Wijeya Newspapers Ltd.,
8, Hunupitiya Cross Road, Colombo-02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புதிய 'சிப்'

கணினி 'சிப்' 'Computer chip' தயாரிப்பில் முன்னணி வகிக்கின்ற AMD (Advanced micro Devices inc.s) என்ற நிறுவனமானது புதிய 'சிப்' ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளது. Accelerated processing unit என்பதை சுருக்கமாகக் குறிப்பிடும் APU 'சிப்'பையே இந்நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது. இந்தியாவின் பெங்களூர் நகரில் வைத்தே இந்த 'சிப்' உத்தியோக பூர்வமாக அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த 'சிப்'பை பயன்படுத்துவதன் மூலம் கணினி செயற்பாட்டின் வேகத்தை அதிகரிக்க முடிவதுடன் பற்றரியின் பாவனைக் காலத்தையும் அதிகரிக்க முடியும் என்றும் APU நிறுவனம் தெரிவிக்கின்றது. அதுமட்டுமன்றி உயர் மட்டத்திலான கிரஃபிக் பாவனையையும் இந்த 'சிப்' கொண்டுள்ளது என்றும் குறிப்பிடப்படுகின்றது. மேற்படி 'சிப்' எதிர்வரும் ஜூன் மாதத்தில் சந்தையில் விற்பனைக்கு வரும் என்றும் கூறப்படுகின்றது.

# அவசரத்திற்கு Recharge செய்யப் புதிய கருவி



ipad, iphone, ipod ஆகியவற்றின் பற்றரியிலுள்ள மின்வலு முழுமையாகத் தீர்ந்து போனால் அதற்கு மீண்டும் மின்வலு (Recharge) ஏற்றுவதற்கு அதிக நேரம் செல்வதுண்டு. இந்தக் குறையைத் தீர்ப்பதற்காக, அப்பிள் (Apple) நிறுவனம் புதிய கருவியொன்றை அறிமுகம் செய்துள்ளது. Auto charge+USB என்று இது அழைக்கப்படுகின்றது. இதன் உயர்மட்ட செயற்பாடானது 2.1AMP USB PORT ஆகும். எனவே, யாரேனும் பயணம் செய்துகொண்டிருக்கையில் கூட அவர்களின் ipad, iphone, ipod ஆகியவற்றின் 'பெற்றரி வலு' முழுமையாக இறங்கியிருந்தால் அதனை மீண்டும் charge செய்வதற்கு இந்தப் புதிய கருவியைப் பயன்படுத்தலாம். இதனுடன், USB கேபிள் ஒன்று வழங்கப்பட்டிருக்கும். அந்த கேபிளைக்கொண்டு இந்தப் புதிய கருவியை இணைத்து உங்கள் பாவனைப் பொருளை charge செய்ய முடியும். இதிலுள்ள சிறப்பம்சம் என்னவென்றால் மிக விரைவாக பற்றரியை charge செய்வதேயாகும். இதனால், 12V மின்வலு ஏற்றப்படுவதுடன் நேரமும் மிச்சமாகின்றது.

# வெப்தளம் அறிமுகம்

## ஓவியம் வரைய...




'சோஷல் நெட்வேர்கிங், முறையில் பலரும் கூட்டுச்சேர்ந்து ஓவியமொன்றை வரையக்கூடிய புதிய வெப்தளமொன்று அறிமுகமாகியுள்ளது.

Flockdraw.com என்பதே இந்த வெப்தளத்தின் முகவரியாகும். இந்த வெப்தளத்திற்குச் சென்று அதிலுள்ள டூல்ஸ் (tools) மூலம் ஓவியமொன்றை வரையத் தொடங்கினால், வேறு எந்தவொரு இடத்திலுமுள்ள ஏனையவர்களும் தமது இடங்களில் இருந்தவாறே இந்த ஓவியத்தில் உள்ள குறைகளைத் திருத்தி அந்த ஓவியத்தை மெருகேற்றி முழுமைப்படுத்தமுடியும். இறுதியில் அனைவரும் ஒன்றுசேர்ந்து தத்தமது இடத்தில் இருந்தவாறே கூட்டாக ஓவியமொன்றை வரைந்து முடிக்க முடியும்.

## இசை உருவாக்கம்....




'ஒன்லைன்' முறையில் இசைக்கருவிகளைப் படைக்கக்கூடிய புதிய வெப்தளமொன்றும் அறிமுகமாகியுள்ளது. 'ஏவியரி' என்ற இந்த வெப்தளத்திற்குச் சென்று அதில் காணப்படுகின்ற பல்வேறு வகையிலான இசைக் கருவிகளின் நாதங்களை எமக்குத் தேவையான ஒழுங்கமைப்பில் கோர்ப்பதன் மூலம் 'ரொக்' இசை அமைப்பு முறையொன்றை உருவாக்கிட முடியும். அவ்வாறே இந்த இசை ஒலிகளை 'எடிட்' செய்து இன்னும் பல இசை வடிவங்களை உருவாக்க முடிவது மட்டுமன்றி அவற்றை 'சேவ்' செய்து வைத்துக்கொள்ளவும் முடியும். இந்த வெப்தளத்தின் முகவரி-aviary.com/online/music-creator

## ஃபோன் கேம்ஸ் இலவசமாக....



கைப்பேசி விளையாட்டுக்களை (Mobile phone games) இலவசமாகப் பெறக்கூடிய வெப்தளம் தான் 'கேம் ஜம்ப்' (game jump) என்ற வெப்தளமாகும். பல்வேறு மொடல்களைக் (Model) கொண்ட கைப்பேசிகளுக்கான 'கேம்ஸ்' களை (விளையாட்டுகள்) இந்த வெப்தளத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

குறித்த கைப்பேசியின் 'மொடல், எது என்ற விபரத்தை வெப்தளத்திற்கு வழங்கினால், அந்த கைப்பேசியில் செயற்படுத்தக்கூடிய விளையாட்டுக்களின் பட்டியலை திரையில் காணலாம். அதில் தேவையானதை டவுன்லோட் (Download) செய்துகொள்ள முடியும். இதன் முகவரி-www.gamejump.com




இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2011, மார்ச் மாதம் 09 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday March 09, 2011.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org